விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 28 ஞாயிற்றுக்கிழமை (12.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 024

# கொத்தணி குண்டை பாவிக்குமாறு அமெரிக்கா பரிந்துரைத்தது!



## செய்ய மறுத்தோம் என்கிறது இலங்கை அரசு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப்போரில் கொத்தணிக் குண்டுகளைப் பாவிக்குமாறு அமெரிக்கா பரிந்துரைத்ததாகவும் தாங்கள் அதனைச் செய்யவில்லையென்று இலங்கை அரசு ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா- இலங்கைக்கு இடையேயான முறுகலின் ஆரம்ப நிலையிலேயே இவ்வாறான ஆதாரங்களை வெளியிட்டுள்ள இலங்கையிடம், அமெரிக்காவின் பங்களிபபுத் தொடர்பான மேலதிக ஆதாரங்கள் இருக்கலாம் என்பதைக் கட்டியம்கூறுவதாகவே இத் தகவல் வெளிவந்துள்ளது.

முல்லைத்தீவு புனித அந்தோனியார் மைதானத்தில் அமெரிக்க அதிகாரிகள் நின்று எடுத்த படம் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சை மற்றும் மன்னார் ஆயர் ஆண்டகை இராயப்பு யோசேப் அவர்கள் போரின் போது கொத்தணிக் குண்டுகள் பாவிக்கப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டு ஆகியவற்றின்

23-ம் பக்கம் பார்க்க

## நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும்

### அமெரிக்கா இறுக்கம்

(கொழும்பு)

நம்பகமான சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் மாற்றமில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது. இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் நம்பகமானதும் சுயாதீனமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியம் என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதல்களில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தாக்குதலில் தப்பித்தவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக பொதுமக்கள் தொடர்பு அதிகாரி

23-ம் பக்கம் பார்க்க

## அமெ. தூதுவர் சிசனுக்கு தே.தே. இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிசன் ஏற்றுக்கொள்ள முடியாத மனிதர் என அறிவிக்குமாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள யுத்தக் குற்றங்கள் தொடர்பான அமெரிக்காவின் தூதுவர் ஸ்ரபன் ஜேராப்புடன் இணைந்து, இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமையால் இவ்வாறு அறிவிக்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீபன் ஜேராப், புதுமாத்தளன் பகுதிக்கு விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட 3 புகைப்படங்கள், அமெரிக்க தூதரகத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டிருந்தது. இதில் ஒரு புகைப்படத்

24-ம் பக்கம் பார்க்க


இராணுவ ஆட்சி தேவையில்லை
செய்திகள் பக்கம் 13


ஆபத்திலிருந்து தப்பிக்கவழி
செய்திகள் பக்கம் 15


சர்வதேச விசாரணைக்கு இடமில்லை
செய்திகள் பக்கம் 05


மெஸ்சி அதிரடி
விளையாட்டு பக்கம் 22

தெற்கு சூடான் கலவரம்
உலகம் பக்கம் 20

வாளாயுதக் கும்பல் உருவெடுத்த மர்மம் என்ன?
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 21

## இறுதிப் போரில் இரசாயன ஆயுதங்கள்; உறுதியானால் உடனடி விசாரணை - ஜே.வி.பி

(கொழும்பு)

இலங்கையின் இறுதி யுத்தத்தில அரசாங்கம் இரசாயன ஆயுதம் பயன்படுத்தியிருக்குமானால் அது சர்வதேச போர்க்குற்றமேயாகும். இவ்விடயம் தொடர்பில் உடனடி விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என ஜே.வி.பி. தெரிவிததுள்ளது. மன்னார்புதைகுழி விடயத் தில் உண்மையைக் கண்டறிந் தால் தமிழர்களின் நிலை வெளிப் படும். மாத்தளை சம்பவம் போல் இதையும் மூடி மறைத்து விடவேண்டாம்எனவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்தினரால் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்து இப்போது இவ்வாறானதொரு கேள்வி எழக் காரணம் என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை தொடர்ச்சியாக

23-ம் பக்கம் பார்க்க

## ஏரியல் ஷரோன் காலமானார்



(ரெல்அவி)

இஸ்ரேலின் முன்னாள் பிரதமரான ஏரியல் ஷரோன் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 85. அரசியல் அதி

02-ம் பக்கம் பார்க்க

## பொங்கலன்று மதுக் கடைகள் மூடப்படாது

(யாழ்ப்பாணம்)

தமிழர் திருநாளான தைப்பொங்கல் அன்று மதுபான கடைகள் மூடப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 14-ம் திகதி தைப்பொங்கல் நிகழ்வு கொண்டாடப்பட உள்ளது.

அதனை முன்னிட்டு மதுபான கடைகள் மூடப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும் பௌர்ணமிதினத்தில் மட்டுமே மதுபான கடைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தைப்பொங்கல் தினமன்று மதுபான கடைகளை மூட முடியாது என கலால் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார். (செ-11)

## அமெ. தூதரகத்தின் டுவிட்டர் குறிப்பு!

### எதிர்ப்புத் தெரிவித்தார் பீரிஸ்

(கொழும்பு)

2009ஆம்ஆண்டுஜனவரிமாதம் படையினரின் பீரங்கித் தாக்குதலில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கொல்லப்பட்ட இடம் என புதுக்குடியிருப்பு சென்.அன்ரனீஸ் மைதானததை அடையாளப்படுத்தி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் டுவிட்டரில் வெளியிட்ட கருத்துக் குறித்து அரசாங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில்அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களை கையாளும் விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப்பிடம் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் வெளிவிவகாரச்செயலாளர்கருணாதிலக அமுனுகம ஆகியோர் நேரில் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். வெளிவிவகார அமைச்சர

02-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கும் ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி பிரார்த்தனை ஊர்வலத்திற்கு விழிப்புணர்வூட்டும் வகையில் நேற்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் வலிமேற்கு பிரதேசங்களில் மூத்த சைக்கிள் ஓட்ட வீரர் வை.கைலைநாதன் தலைமையில் சுப்றா கல்வி நிறுவன மாணவர்கள் ஓம் நமசிவாய மந்திர பாராயணத்துடன் கிராம வலம் வந்தார்கள்.

இந்நிகழ்வு சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலிமேற்குப் பிரதேசசபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் கலந்து கொண்டார்.

# அமெ.தூதரகத்...

மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் ஆகியோரை அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸரீபன் ராப் கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்து பேசியிருந்தார்.

இதன்போதே, அமெரிக்கத் தூதரகம் மற்றும் ஸ்ரீபன் ராப் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டு, கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, அரசாங்கத்துக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ள குறித்த புகைப்படம் மற்றும் விளக்கக் குறிப்பை டுவிட்டரில் இருந்து நீக்க முடியாது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

படைத்தரப்பினரின் பீரங்கித் தாக்குதலில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கொல்லப்பட்ட இடம் என்று புதுக்குடியிருப்பு சென். அன்ரனீஸ் மைதானத்தை அடையாளப்படுத்தி இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் விளக்கம் கொடுத்திருந்தது.

இதற்கு வெளிவிவகார அமைச்சு மற்றும் படைத்தரப்பு ஆகியன கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள நிலையிலேயே, குறித்த புகைப் படத்தையும், விளக்க குறிப்பையும் நீக்க முடியாது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இலங்கை தொடர்பில் டுவிட்டரில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பு அமெரிக்காவின் அதிகாரபூர்வ நிலைப்பாடு என்று சர்வதேச ஊடகம் ஒன்றிடம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com

# ஏரியல் ஷரோன்...

காரத்தின் உச்சத்தில் இருந்த காலத்தில், திடீரென்று தாக்கிய மூளை ரத்தக்கசிவு - ரத்த உறைவினால் ஏற்பட்ட பக்கவாதத்தால் 2006-ம் ஆண்டிலிருந்து ஏரியல் ஷரோன் கோமா நிலையிலேயே இருந்துவந்தார்.

சிறுநீரகங்கள் உள்ளிட்ட பெரும்பாலான உடல் உறுப்புகள் செயலிழந்துபோயிருந்த நிலையில் அண்மைய நாட்களாக அவரது நிலை மோசமடைந்தது.

இஸ்ரேலிய வரலாற்றில் ஏரியல் ஷரோனுக்கு பெரும் பங்கு இருக்கிறது.

இராணுவ ஜெனரலாக இருந்தவர், பின்னர் ஓர் அரசியல்வாதியாகவும் மாறினார்.

எனினும் மிகவும் சர்ச்சைக்குரிய நபராகவும் ஏரியல் ஷரோன் கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தேசிய தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் தேசிய தைப்பொங்கல் விழா எதிர்வரும் 19-ம் திகதி காலை 10 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.

இது தொடர்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு நேற்று வெளியிட்ட செய்தியில் தைப்பொங்கல் விழா நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நடைபெறும் எனத் தவறுதலாக தெரிவித்திருந்தது.

நல்லூர்க் கந்தன் ஆலயம், ஒரு கட்டுக்கோப்புடன் தனித்து தெய்வீகத் தன்மைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருவது தெரிந்ததே.

எனவே நேற்றைய தினம் வெளிவந்த செய்தியை திருத்தி, நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தைப்பொங்கல் விழா நடைபெறும் என்பதை சேர்த்துக் கொள்ளவும். (ந)

உள மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



11.01.2014 யாழ் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் B.A (Hons) பட்டம் பெற்றுக் கொண்ட

கோபாலசர்மா ரகுவரன்

அவர்கள்

மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

தம்மனை,
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

பாராட்டி வாழ்த்துவோர்
சசி மாமா
குடும்பத்தினர்

(4903)

இகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையின் ஆசிரியர்

திரு.நித்தியானந்தக்குருக்கள் ஜெகானந்தன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி பட்டம் பெற்றதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதுடன் அவர் மேன் மேலும் பல பட்டங்கள் பெற்று பாரினில் என்றென்றும் சிறப்புப் பெற இறைவனை வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/சித்தன்கேணி
ஸ்ரீ கணேச வித்தியாலயம்

(4904)

O/L , A/L இன் பின்னர்...

யாழ் நகரில்



Edexcel HNDs in...

- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Law
- Business Management
- Computing

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) / LLB (Hons) from more than 105 Universities in UK , USA, Australia & Canada etc.......

- உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு
- மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு
- கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

15 YEARS
ISO 9001:2008 CERTIFIED

Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள இரு வரவேற்பறைகள், மூன்று அறைகள், வாகனத்தரிப்பிடத்துடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குள்ளது

தொடர்புகளுக்கு:-
0777487820

(5251)

விற்பனைக்கு

புதிய ஹோட்டல் ஒன்று ஆரம்பிப்பதற்குரிய சகல பொருட்களும், 2 D பிறிச் உட்பட விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0774683321

(சி-6180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மீது புரியப்பட்ட படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதைகுழி தொடர்பாகவும் இதுவரை தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட படுகொலைகள் தொடர்பாகவும் சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அக்கட்சி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் திருக்கேதீஸ்வரம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மாந்தைச் சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு செல்லும் பிரதான வீதியிலிருந்து 75 மீற்றர் தூரத்தில் குறித்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடம் 1990 ஆம் ஆண்டிலிருந்து இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாகவும் இராணுவப் பிரிவு ஒன்றின் கட்டளை தலைமையகமாகவும் இருந்துள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

எனவே, இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள் என்பன கடந்த காலத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போன தமிழ் மக்களுடையது என்றே நாம் சந்தேகிக்கின்றோம்.

ஆயுதம் தரிக்க முடியாத சிறுவர்களும் கொல்லப்பட்டிருப்பதானது போராளிகள் என்பதற்கும் அப்பால் ஒரு இனத்தின் இருப்பினை ஒட்டுமொத்தமாக அழிக்கின்ற எண்ணத்தினை கொலையாளிகள் கொண்டிருந்துள்ளமையை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது. எனவே இது அப்பட்டமான இனப்படுகொலையின் ஒரு அங்கமாகும்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்டவர்களின் எச்சங்களாக இருக்கலாமென சந்தேகம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

எனவே சர்வதேச சமூகமானது யுத்தம் நடைபெற்ற இறுதி மூன்று ஆண்டுகளில் மட்டும் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்கு விசாரணையை கோருவதுடன் மட்டுப்படுத்திக் கொள்ளாது இலங்கையில் இருந்து பிரித்தானியர்கள் வெளியேறிய நாள் தொடக்கம் இன்று வரை நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற இனப்படுகொலை தொடர்பில் முழுமையான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முன்வர வேண்டும்.

இப் புதைகுழி தொடர்பாக இலங்கை அரசு மேற்கொள்ளும் எந்தவொரு விசாரணையும் உண்மையை வெளிக் கொண்டு வந்து குற்றவாளிகளை தண்டிப்பதற்கு வழிவகுக்காது. கட ந்த காலத்தில் செம்மணி புதை குழி விசாரணைகள் நீதிபதி ஒருவரது முன்னிலையில் இடம் பெற்றபோதும் அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பது டன் அக் கொலைகளுடன் தொடர்புடையவர்கள் கண்டு பிடிக்கப்படவோ தண்டிக்கப்ப டவோ இல்லை.

எனவே தற்போது மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதைகுழி தொடர்பாகவும் இதுவரை தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட படுகொலைகள் தொடர்பாகவும் ஓர் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சர்வதேச சமூகத்திடம் கோருகின்றது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தரவுகள் குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்யவேண்டும்

புள்ளி விபரத் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியின் தகவல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ட்ரான்பெரன்சி இன்டர்நசனல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. சமூகப் பொருளாதார புள்ளி விபரத் தகவல்கள் திரிபுபடுதப்பட்டு வெளியிடப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென சபாநாயகர் சமால் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை நடத்த பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென அவ் அமைப்பு அறிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வறியர்களின் எண்ணிக்கை போன்ற முக்கிய சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள் தொடர்பில் பிழையான தகவல்களை புள்ளி விபரத் திணைக்களமும் மத்திய வங்கியும் வெளியிட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்கவும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கொள்கைத் திட்டங்களை வகுப்பதற்கு இந்த புள்ளி விபரத்தகவல்களின் துல்லியத்தன்மை மிகவும் அவசியமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்தை பிழையாக வழிநடத்தும் நோக்கில் இவ்வாறான புள்ளி விபரத் தகவல்கள் வெளியிடப்பட்டு வருவதாக ட்ரான்பெரன்சி இன்டர்நசனல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)


31ம் நாள் நினைவலைகள்

அமரர் திருமதி இராசையா தங்கன்

கடந்த 13.12.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவு செய்தி கேட்டு எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியோர் மற்றும் வெளிநாட்டில், உள்நாட்டிலிருந்து தொலைபேசி, இணையம் மூலம் ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம்:- 1940.05.06

மறைவு:-2013.12.13



அன்னாரின் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்றைய தினம் (ஞாயிற்றுக்கிழமை) 12.01.2014) கனடாவில் வசிக்கும் அன்னாரின் மகளான இராஜசிலோசனாவின் (ராஜி) இல்லத்தில் இடம்பெறும் என்பதனை அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

காட்டுப்புலம்,
தொண்டமனாறு.

தகவல்:-
மகாலிங்கம் குடும்பத்தினர்
(உடுப்பிட்டி செய்தியாளர்)



கண்ணீர் அஞ்சலி



எமது மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் அர்ப்பணிப்பு மிக்க பணியாளராக கடந்த ஆறு ஆண்டுகளாக பணியாற்றிய

அமரர் சிங்கராஜர் புஸ்பராஜா

அவர்கள் நேற்று (11.01.2014) அமரத்துவம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 238,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/6174)

இயக்குநர், அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்,
திருமறைக் கலாமன்றம்



2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27.04.1971

இறப்பு 06.01.2012

திதி:12.01.2014

அசைந்து விட்டது
ஆண்டுகள் இரண்டு இருந்தும்
நிசப்த பொழுதுகளில் - நின்
நினைவு வரும் தொப்புள் குழியில்
உண்டாகும் வலி
தொண்டைக் குழியை
இரண்டாக்கி வெளியேறும்
இடம், பொருள், ஏவல்
இல்லாது அழுகை
நில்லாது நிலைக்கும்
ஆண்டு இரண்டென்ன
இருநூறு ஆனாலும்- இது நடக்கும்
அப்பா என்ற ஆணிவேரே நின்
நினைவுகள் நீளும்
கனவுகள் மீளும்

அமரர் துரைராஜா விக்னேஸ்வரன் (பிள்ளையார்)

நி.முகவரி:இரணைமடு
அம்பாள் நகர்,
கிளிநொச்சி.
த.முகவரி:
மயில்வாகனபுரம்,
பிரமந்தனாறு. (5292)

தகவல்: மனைவி,
பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்
மயில்வாகனபுரம், பிரமந்தனாறு.



2013 A/L பரீட்சை பெறுபேறுகள் திருப்தியின்மையா..!

நீங்களும் Britrish / IESL (SL) Chartered Engineer / Quantity Surveyor ஆகலாம

City & Guilds Gold Medal Winners 2013 / 2014

பெற்றோர்கள் / மாணவ, மாணவிகளே...

A/L தராதரத்தோடு Diploma / Advanced Diploma தராதரத்தை 1 வருட காலத்திலும் பட்டப்படிப்பு B.Eng(Hons) 1 வருட காலத்திலும் பயின்று நீங்களும் Chartered Engineer ஆக்லாம்.

Civil Engineering

Quantity Surveying

Electrical & Electronics

Telecommunication

வாழ்த்திப்பாரட்டுகின்றோம்

தொடர்ந்தும் இரண்டாவது முறையாக உலகலாவிய ரீதியில் சிறந்த பொறியியல் துறை விரிவுரையாளர் என்ற விருதை இவ்வாண்டிலும் தெரிவுசெய்யபட்டுள்ளார்



Prof. K. Chandirabose
Course Director/Senior Lecturer
APSS International
Outstanding Lecturer in
Electrical & Electronic Engineering

வாழ்த்திப்பாரட்டுகின்றோம்

பொறியியல் துறையில் உலகலாவிய ரீதியில் Medal of Excellence விருதை வென்றெடுத்துள்ளார்.



Mr. Safran Ahamed Jhan Mohamed

Responsible, with pleasing qualities, willing hardworking intelligent student, with ability to observe, Curious to explore

City & Guilds Approved Centre

Diploma / Advanced Diploma சித்தியெய்தியதும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்.
Diploma முடித்த ஒருவருக்கு ஊதியத்தோடு Industrial Training கொடுக்கப்படும்.

APSS International, DMI Computer Education ஆதரவுடன் 2014 June க்கான City & Guilds வகுப்புக்களை யாழில் ஆரம்பிக்கிறது. (சி/6175)

சேர விரும்புவோர் 077 3867695 / 077 2306642 உடன் தொடர்பு கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இடம்பெறவுள்ள மீனவர் சந்திப்பு தொடர்பில் தெளிவுபடுத்துக

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தியாவில் இடம்பெறவுள்ள சந்திப்பு தொடர்பில் வட பகுதி மீனவர்களுக்கு தெளிவுபடுத்தப்படல் வேண்டுமென தேசிய சபை ஒத்துழைப்பு இயக்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் அவ் இயக்கத்தின் வட கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், யாழ்.மாவட்ட இணைப்பாளர் நாகமுத்து இன்பநாயகம், தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார ஆகியோர் இணைந்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணத்தினால் வடபுலத்து மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இப் பிரச்சினையை தீர்ப்பதற்காக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதே வேளை 2011 ஆம் ஆண்டு வட மாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பை உருவாக்கி அதனுடனும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

எனினும் இப்பிரச்சினை தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இலங்கை கடற்படையினர் ஒரு சில இந்திய இழுவைப் படகுகளையும் மீனவர்களையும் கைது செய்த போதும் இப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு எதுவும் கிடையாது.

இந் நிலையில் இரு நாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தீர்வு ஒன்றை முன் வைக்க வேண்டும் என்ற இந்தியாவின் தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தியாவில் வைத்து இரு நாட்டு மீன வர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபடப் போவதாக ஊடகங்கள் ஊடாக அறிகின்றோம்.

எனினும் இது தொடர்பான தெளிவான நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கிடையாத அதே வேளை இலங்கை சார்பாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளப் போகும் பிரதிநிதிகள் தொடர்பான தகவல்களும் வட புலத்து மீனவர்களுக்கு தெரியாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், பிரான்பற்று, நல்லூர், மருதங்கேணி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் 2014 ஆம் ஆண்டிற்கான தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை ஆரம்பித்து நடத்தி வருகின்றது. இவற்றில் இலவச கற்கைநெறிகளும் உண்டு. இவை தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான கற்கைநெறிகளாகும்.

இக் கற்கைநெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை மாவட்ட அலுவலகம் 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரி அல்லது ஏனைய தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அதன் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை 021-222 7949 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (அ)

# அங்கர் பால்மாவை பதுக்கிய நபர்களுக்கு எதிராக வழக்கு

நெல்லியடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது அங்கர் பால்மா வகையை மறைத்து வைத்திருந்த 5 கடைகள் இனம்காணப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெல்லியடியிலுள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 5 கடைகளில் நுகர்வோருக்கு அங்கர் பால்மாவை வழங்காமல் மறைத்து வைத்திருந்தமை தெரிய வந்தது.

குறித்த 5 கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக அதிகாரிகளினால் வழக்கு தொடரப்படவுள்ளது. (அ-9-60)

# கைலாசபதி அரங்கில் நினைவு பேருரை

யாழ்.பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்பு விழாவின் பின்னர் லேடி லீலாவதி இராமநாதனின் நினைவுப்பேருரை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கையில் தொழில் நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்வி தேக்க நிலையத்திலிருந்து பேண்தகுநிலைக்கு நகர்தல் எனும் தொனிப்பொருளில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார். (அ-2)

# இராசி பலன்

12.01.2014
(மார்கழி 28, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
ரோகிணி முழுவதும்
இராகுகாலம் 5.03-6.33 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
எமகண்டம் 12.33-2.03 மணிவரை

**மேடம்** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்ட வேண்டி வரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சோம்பலாக இருப்பீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்** தனதானிய சேர்க்கையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் ,சயன சுகமுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு, முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் நாள்.

**மிதுனம்** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், தூரதேச செய்திகள் வந்து சேரலாம், அதிகாரத்துடன் செயற்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்** பிறருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகும், எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், பிரயாணங்களால் நன்மையுண்டு, சரீரப் பிரயாசையில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** அஜீரணத் கோளாறு ஏற்படலாம், பொருள் விரயமுண்டு, மனதில் இனம் புரியாத பயம் உருவாகும், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கன்னி** மனோ தைரியமுண்டு, சயனசுகமான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் முன்னேற்றகரமாக அமையும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**துலாம்** நீங்கள் ஆசைப்பட்ட பொருட்கள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் நன்மையுண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், பணக் குறையுண்டு, அஜீரண ரோகமுண்டு, புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு** மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், தன விரயங்கள் கூடும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, பெற்றோர் மீது அதிக பாசம் காட்டுவீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் உருவாகும்.

**மகரம்** மனோ தைரியமுண்டு, நற்கீர்த்தியுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், போசன நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** செலவுகள் அதிகமாகும், போசன சுகக் குறைவுண்டு, காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டி வரலாம், வாக்கு மேன்மையுண்டு, ரோக பயமுண்டு.

**மீனம்** வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயனசுகமுண்டு, மாதர் நட்புண்டு, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## அதிகாலை ஆலோசனை

"என்னம்மா இது ... அதிகாலை நேரத்தில்ஆஸ்பத்திரியை தேடி வந்திருக் கிறாய்?..."

"ஒரு முக்கியமான சந்தேகத்தை உங்களிடம் கேட்க வேண்டும் என்று வந்திருக்கிறேன் டாக்டர்"

"என்ன சந்தேகம் !"

"தூக்கத்தில் சிலபேர் உளறுகிறார்களே அது ஏன் டாக்டர்?"

"இதற்காகவா இவ்வளவு அவசரமாக வந்தாய்?"

"ஆமாம் டாக்டர்"

"ஆழ் மனதில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆசைகள் ... அனுபவங்கள்... எண்ணங்கள் ... ஆவேச உணர்ச்சிகள் ... இவற்றின் வெளிப்பாடுதான் தூக்கத் தில் உளறுவது!"

"கனவு காண்பதற்கும் உளறுவதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா டாக்டர்!"

"பெரும்பாலும் தூக்கத்தில் காணும் கனவுக்கும் அப்பொழுது அவர்கள் உளறுவதற்கும் தொடர்பு உண்டு! கனவில் தோன்றும் உணர்வுகளுக்கு ஏற்றாற் போல் அசைவு கொடுப்பது... சில வார்த்தைகள் பேசுவது ... போன்றவை கூட அந்தச் சமயத்தில் நடக்கலாம்!

உதாரணமாக ஒருவர் குதிரையில் சவாரி செய்வது போல் கனவு காண்கிறார் என்றால் தூக்கத்திலும் அவரின் உடம்பு அதற்கு தகுந்தாற் போல் அசையலாம் அது சம்பந்தமான வார்த்தைகள் வரலாம் !

அது சரி... நீ ஏன் இதையெல்லாம் விபரமாக கேட்கிறாய்?"

"என் வீட்டுக்காரர் தூக்கத்தில் உளறுகின்றார். ஏதேதோ பெயர்கள் எல்லாம் சொல்கிறார்..."

"அவரை அழைத்துக் கொண்டு வாம்மா... அதையெல்லாம் நிறுத்தி விடலாம்"

"நிறுத்த வேண்டாம் டாக்டர் .... நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்..."

"என்ன செய்ய வேண்டும் சொல்!"

"அவர் உளறுகிற பெயரெல்லாம் என்ன என்று எனக்குத் தெளிவாக கேட்கிறது மாதிரி செய்தால் போதும் மற்றதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 90 | 80 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 60 | 80 |
| தக்காளி | 60 | 60 | 30 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 40 |
| கரட் | 40 | 30 | 60 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100-160 | 100-270 | 180 | 120 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 140 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 25 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 20 | 40 | 40 |
| பயற்றங்காய் | 150 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 70 | 90 | 80 |
| பீற்றூட் | 80 | 70 | 30 | 80 |
| கறிமிளகாய் | 90 | 140 | 120 | 140 |
| போஞ்சி | 80 | 80 | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | -- | -- | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 25 | 40 |
| தேசிக்காய் | 40 | 30 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

**இலங்கை தொடர்பிலான சர்வதேச விசாரணை தேவையென்ற வலியுறுத்தலை கடுமையாக எதிர்க்கின்றேன். இது அவசியமற்றது மட்டுமல்ல எமது நாட்டின் இறையாண்மையை மீறும் செயலாகும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

எமக்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்கப்படுமானால் அது எமது பொருளாதாரத்தை பாதிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

எமக்கு மறைப்பதற்கு எதுவுமே இல்லை. எவரும் இங்கு வந்து அனைத்தையும் பார்வையிடலாம். அதற்கான கதவுகள் திறந்தே உள்ளன என்பதே ஜனாதிபதியின் கொள்கையாகும்.

அதற்கமையவே அமெரிக்காவின் விசேட பிரதிநிதி ஸ்டீபன் ரப்புக்கும் அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு வந்தவர்கள் குற்றச்சாட்டுக்களை சுமத்தலாம்.

ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு மாநாட்டில் எமக்கெதிராக அமெரிக்க பிரேரணைகளை சமர்ப்பிக்கலாம். ஆனால், அதற்கு எம்மால் பதில்களை வழங்க முடியும். அதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா உட்பட வேறு பல விடயங்களை வெளிநாடுகளால் கண்காணிக்க முடியும்.

ஆனால், எங்கள் விடயங்களை சர்வதேச ரீதியில் விசாரணை செய்ய முடியாது. அதற்கு இடமளிக்க முடியாது. சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. அதனைக் கடுமையாக எதிர்க்கின்றேன். இது எமது நாட்டின் இறையாண்மையை மீறும் செயலாகும்.

ஐ.நா சபையால் பொருளாதாரத்தடை விதிக்க முடியாது. மாறாக அமெரிக்கா உட்பட வேறு நாடுகள் தாம் நினைத்தால் பொருளாதாரத் தடைகள் விதிக்கலாம். அவ்வாறான தடைகள் விதிக்கப்படுமானால் எமது பொருளாதாரம் பாதிக்கும்.

யாழ்.மன்னார் ஆயர்களுக்கு அவர்களது நிலைப்பாட்டை தெரிவிக்கும் உரிமையுண்டு. அதேவேளை, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் உரிமை எமக்கு உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## ஆபரணக் கைத்தொழில் குறித்து தேசியக் கொள்கை

மாணிக்கக்கல் ஆபரண கைத்தொழில் தொடர்பாக தேசிய கொள்கை ஒன்று அறிமுகம் செய்யப்படும் என சுற்றாடல், மீள் சுழற்சி எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சுற்றாடலை பாதுகாக்கும் வண்ணம் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபடுதல், மாணிக்கக்கல் வெட்டுதல், பட்டை தீட்டுதல் போன்ற துறைகளில் புதிய தொழில் நுட்ப உபாயத்தை அறிமுகம் செய்தல் போன்றவை இதில் அடங்கும், இது தொடர்பாக விசேட பயிற்சியும் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## கொழும்பில் டெங்கு தாக்கம் அதிகரிப்பு

கொழும்பின் தெஹிவளை, கொஹுவல, கடுவல, கொலன்னாவ, அங்கொட, மொறட்டுவ மற்றும் கடுபெத்த ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோய் தொற்று அவதானம் நிலவுவதாக அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந் நிலையில், இன்றைய தினம் குறித்த பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள், அரச நிறுவனங்கள் மற்றும் பிற இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## 250 அடி பள்ளத்தினுள் வீழ்ந்தது ஆட்டோ; ஒருவர் பலியானார்

முச்சக்கர வண்டியொன்று பனி மூட்டம் காரணமாக சுமார் 250 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகிய சம்பவமொன்று பதுளையில் இடம்பெற்றுள்ளது.

படல்கும்புர பிரதேசத்தில் இருந்து பதுளையை நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியே விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இருவர் படுகாயமடைந்த நிலையில் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)


உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கையான ஒரு நண்பர் தேவையா?
மு.ப. 9.00-பி.ப. 1.00 வரை அழையுங்கள்
021 222 8117
கைகொடுக்கும் நண்பர்கள் (இரகசியம் பேணப்படும்)
(சி/6158)

**வேலைவாய்ப்பு**
இன்றே பதிவுக்கு முந்துங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/கோடியல்/சோஸ்/சோயா/நூடில்ஸ்/டயர்/கிளவுஸ்/Pvc/பிளாஸ்டிக்/தேங்காய் பால்மா/கோழி இறைச்சி/Cargills /(Keels Delivery) பிரிவுக்கு +உற்பத்தி+ லேபல்+ பொதியிடல்+ தரம்பிரித்தல்+ களஞ்சிய பிரிவுக்கு 18-50 ஆண்- பெண் தேவை. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உணவு+ தங்குமிட வசதிகள் குறைந்த விலைகளில். சம்பளம் 18000/- 32000/- வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு.
தொடர்பு:- 0778430179 (சி/6168)

**தொண்டர் தேவை**
தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கும் உதவத் தயாரா? எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள். வாரத்தில் ஒரு நாள் மட்டும், நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிப் பணியாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும். காலை 9.00 - பி.ப. 1.00 இடையில் அழையுங்கள்.
021 222 8117
கை கொடுக்கும் நண்பர்கள்,
இல. 104, நான்காம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(C-6158)

**தொழில் வாய்ப்பு**
மலர்ந்திருக்கும் பிரகாசமான புத்தாண்டில் திறமையுள்ள உங்களுக்கு தொழில் வாய்ப்பு துறைமுகம் (தனியார்) சாதாரண ஊழியர்கள், தச்சு, பெயின்டிங், வெல்டர் மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர்/ கேட்டரீஸ்/ லொன்றி பிரிவுக்கு 18-45 ஆண்- பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18000/- 32000/- உணவு தங்குமிடம் குறைந்த விலையில்.
தொடர்பு:- 0774312176

**கல்யாண மாலை**
இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 37 ¼ செவ் 8 ல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: MBA, CA / நாணயமாற்று நிலையம் (UK PR)<br>தொ.இ: B/930 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 5 ¼<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: B.Com, M.Com / ஆசிரியர்<br>தொ.இ: G/1323 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 30 ¼ செவ் 12 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Advances Dip. in Electronics & Communication / சுயதொழில்<br>தொ.இ: B/933 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 49 செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, AAT<br>தொ.இ: G/1325 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 44 ½<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Dip. in Computer Engineer / தற்காலிக வேலை<br>தொ.இ: B/935 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 19 செவ் 1 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி<br>தொ.இ: G/1334 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 34உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரிய ஆலோசகர்<br>தொ.இ: B/937 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 21 ½ செவ் 12 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L எதிர்பார்ப்பு: வேறு இனத்தவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/1339 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

northern PC PARK
கணனி, லப்ரொப் வகைகள், பற்றரிகள், கெட்செற், கீபோட் மற்றும் அனைத்து வகையான கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ள நாடுகள்!
PC PARK
TOWN SHOW ROOM
#10-14, STANLY ROAD,
JAFFNA.
021 222 2050
TECHNICAL DIVISION
#288, PALALY ROAD,
KANTHARMADAM,
JAFFNA.
0217201444
info@pcpark.co www.pcpark.co
PC PARK
#269E, PALALY ROAD,
KANTHARMADAM,
JAFFNA.
0212220388



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பின

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பிரதேச மீனவர்கள் இவ்வாண்டிற்கான தொழில் நடவடிக்கை களை ஆரம்பித்துள்ளதனால் வழமை போன்று வெளி மாவட்ட வியாபாரிகள் கடலுண வுகளை கொள்வன செய்ய முடியுமென பிர தேச மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

காலநிலை சீரின்மையால் மணற்காடு முதல் சுண்டிக்குளம் வரையான கடற்றொ ழிலாளர்கள் புதுவருடத்திற்கான தொழிலை மேற்கொள்ளவில்லை.


இதனால் வழமையான தொழில் நட வடிக்கைகள் பாதிப்படைந்து மீன்சந்தைகளும் இயங்கவில்லை.

இந்நிலையில் வெற்றிலைக் கேணி மீன வர்கள் தமது முதலாவது தொழில் நடவடிக் கையை நேற்றைய தினம் ஆரம்பித்துள் ளனர்.

ஏனைய கிராமங்களிலுள்ள மீனவர்களும் நாளை முதல் தொழிலை மேற்கொள்ளவுள் ளனர்.

எனவே, வழமை போன்று மீன் சந்தைகள் இயங்கும் என்றும் பூநகரி, மன்னார், கிளி நொச்சி போன்ற வெளி மாவட்டத்திலிருந்து வந்து கடலுணவுகளைக் கொள்வனவு செய் யும் வியாபாரிகளை வருகை தருமாறும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-64)



நன்றி: இணையம்

## இளைஞர் கழகத்துக்கு நிர்வாகிகள் தெரிவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத் திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனர மைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

2014ஆம் ஆண்டுக்கான புதிய நிரவாகிகள் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டு வருகிறனர்.

இதன்படி ஜே/133 ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் இவ்வாண்டு புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை முள்ளி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.


புதிய ஆண்டுக்கான தலைவராக பிடியோ னிஸ கூரே, செயலாளராக செ.ஜெய வர்ணன், பொருளாளராக ஜெ.சுகன்யா, அமைப்பாளராக றொபின்ஷன், உப தலைவ்ராக ம.வானுஷா, உப செயலராக ச.ஜான்சன் ஆகியோரும் ஏனைய துறைக்கான தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டனர.

இந் நிகழ்வில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன உபதலைவரும் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான க. உஷாந்தன, பிரதேச இளைஞர் கழக சம்மேளன அமைப்பாளர் ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ-9-23)

# விமானத்திலிருந்து மீட்கப்பட்ட ஆடைகள் நேற்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன





(யாழ்ப்பாணம்)

14 வருடங்களுக்கு முன் சுட்டு வீழ்த்தப் பட்ட லயன் எயார் அன்டனோவ் 24 ரக உள்நாட்டு பயணிகள் விமானத்திலிருந்து மீட்கப்பட்ட ஆடைகள் யாழ்ப்பாணத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகாமையிலுள்ள யாழ்.மாநகர சபை மைதா னத்தில் நேற்றைய தினம் இவ் ஆடைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இவ் ஆடைகளை இன்றும் காட்சிப்படுத்தவுள் ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித் துள்ளது.

இதனால் 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் 29 ஆம் திகதி சுட்டு வீழ்த்தப்பட்டதாக நம் பப்படும் லயன் எயார் விமானத்தில் பய ணித்து உயிரிழந்த பயணிகளின் உறவி னர்கள் அல்லது அவர்கள் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் குறித்த இரு தினங்களில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு அரு கிலுள்ள மாநகர சபை மைதானத்துக்கு வருகை தந்து உயிரிழந்தவர்கள் தொடர்பில் தகவல் வழங்குமாறு பொலிஸ் தலைமையகம் கேட் டுள்ளது.

14 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடு தலைப்புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறப்படும் லயன் எயார் அன்டனோவ் 24 ரக உள்நாட்டு பயணிகள் விமானத்தின் நொரு ங்கிய பாகங்கள் கடந்த வருடம் மே மாதம் மீட்கப்பட்டிருந்தன.

வடபகுதி கடற்பரப்பின் இரணை தீவுக்கு அண்மையில் கடலுக்கு அடியிலிருந்து இவ் விமானத்தின் சிதைவடைந்த பாகங்கள் மீட் கப்பட்டன.

விமானத்தின் என்ஜின் மோட்டார் மற்றும் விமானத்தின் பின்புறப் பகுதிகள் உயிரிழந் தவர்களின் எலும்புக் கூடுகள், ஆடைகள் போன்றன இலங்கை கடற்படைக்கும் சொந் தமான கப்பலொன்றின் உதவியுடன் மீட்கப் பட்டன.

பலாலி விமான நிலையத்திலிருந்து கடந்த 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் 29 ஆம் திகதி 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்கள் மற்றும் இரு உக்ரேனிய விமானிகளுடன் இரத்மலானைக்கு புறப்பட்ட இவ் விமானம், புறப்பட்டு 10 நிமிடங்களின் பின்னர் ராடர் திரை யிலிருந்து மறைந்து போனது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் இந்த விமானம் வீழ்த்தப்பட்டதாக கூறப்படுகின்றது.

இருப்பினும் இவ் விமானம் வீழ்த்தப்பட்ட மர்மம் இன்னமும் துலங்காத நிலையில் மேற்படி விமானத்தின் பாகங்களை கடற் படையினர் கண்டுபிடித்திருந்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆடைகளில் 72 ஆடைகள் நேற்று காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நேற்றைய தினம் குறிப்பிட்ட தொகையினர் காட்சிப்படுத்தப்பட்ட ஆடைகளை பார்வையிட் டதை அவதானிக்க முடிந்தது. (அ-4)

# வடமராட்சியில் மின்சார உப நிலையம் அமைப்பு



(கரவெட்டி)

வடமராட்சி மின்சார நிலை யத்தின் உப அலுவலகம் 28 மில்லியன் 78 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக் கப்பட்டுள்ளது என வடமராட்சி உப மின்சார அத்தியட்சகர் கே. இராஜேஸ்வரன தெரிவித்துள் ளார்.

இவ் உப அலுவலகம் பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மின்சார நிலையத்தின் உப அலுவலகம் நிரந்தரக் கட்டடமின்றி மாலு சந்தியிலுள்ள தனியார் வீடொன்றில் வாடகைக்கு இயங்கி வந்த நிலையில் தற்போது நிரந்தர அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இக் கட்டடத்தின் திறப்பு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 க்கு மின்சார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-9-24)

# பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு; குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்

(மானிப்பாய்)

தனது இரு மகள்களையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சந்தேக நபரான தந்தை ஒருவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து எங்கள் தந்தை எங்களை பாலியல் துஷ்பிரயோ கத்திற்கு உட்படுத்தி வருவதாக குறித்த சிறுமிகள் தெல்லிப்பழை சிறுவர் நன்னட த்தைப் பிரிவிற்கு கடந்த வாரம் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இதையடுத்து, தெல்லிப்பழை சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ரி.திருமாறன் இது தொடர்பாக பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து,

யாழ். அளவெட்டி பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய குடும்பஸ்தரே தனது 13, 14 வயதுடைய இரு மகள்களையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச் சாட்டில்கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய் யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்று முன்தினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டார.

இந்நிலையில், வழக்கை விசர்ரித்த நீதவான் மேற்படி நபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் பாதிப்புக்குள்ளான சிறுமிகளை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி ப்பதுடன் அவர்கள் தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையினை பெற்று நதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளிக்கு செல்ல தமிழ் மாணவி தெரிவு



விண்வெளிக்கு முதல்முறையாக செல்வதற்கு தமிழ் மாணவியொருவர் பிரித்தானிய விண்வெளி ஆராய்ச்சி மையத்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் வசிக்கும் சிவேன் ஞானகுலேந்திரன் என்ற தமிழ் மாணவியே தெரிவாகியுள்ளார்.

பிரித்தானியாவில் பல மாணவர்கள் விண்வெளி தொடர்பாக கல்வி கற்று வருகின்றார்கள்.

செயற்கை கோளை விண்வெளிக்கு ஏவுவது, விண்வெளியில் இருந்து நில அளவை செய்வது என பல்வேறு துறைகளில் சுமார் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

இவர்களில் அதீத திறமை மிக்க 2 மாணவர்களை விண்வெளிக்கு அனுப்ப பிரித்தானிய விண்வெளி ஆராய்ச்சி மையம் முடிவெடுத்துள்ளது.

அதில் மிகத் திறமையாக சித்தியடைந்துள்ளார்.

இந்த மாணவி நுண்ணியல் உயிர்களைப் பற்றி நன்கு கற்று திறமை பெற்றிருக்கிறார். அத்தோடு அவர் விண்வெளி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மாணவர்களை கௌரவிக்க த.தே.ம.முன்னணி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து தோற்றிய மாணவர்களில் ஒவ்வொரு பாடத்துறைகளிலும் முன்னிலை பெற்ற மாணவர்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவினால் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

அந்த வகையில் கலை, வர்த்தகம், உயிரியல், கணிதம் ஆகிய கற்கை நெறிகளுக்கு வழங்கப்படவுள்ள விருதுகளின் படி,

**கலைப்பிரிவு:** தந்தை செல்வநாயகம் ஞாபகார்த்த விருது.

**வர்த்தக பிரிவு:** மாமனிதர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் ஞாபகார்த்த விருது.

**உயிரியல் பிரிவு:** மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த விருது.

**கணிதப் பிரிவு:** மாமனிதர் பேராசியர் அழகையா துரைராஜா ஞாபகார்த்த விருது என விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வை வெகுவிரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக அக்கட்சியின் கல்வி மேம்பாட்டு பிரிவு இணைப்பாளர் செ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ)

# பிரிவுத்துயர் பகிர்வு



**சுப்ரமணியம் மோகனதாஸ்**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் மோகனதாஸ் 6 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியை நாளை காலை 10 மணிக்கு St.Marylebone Cremantarium, East End Road, East Finchley, London N2 0RZ, UK என்னும் முகவரியில் நடைபெறும்.



**டானியல் கந்தையா மகேந்திரன்**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் கந்தையா மகேந்திரன் 6 ஆம்திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு Christ Church, Epsom Common, Christ Road, Epsom, Surrery KT19 8NE, UK என்னும் முகவரியில் நடைபெறும்.



**பாலசுப்பிரமணியம் சின்னத்தம்பி**

(நில அளவையாளர் - இலங்கை, போட்சுவானா, சிம்பாப்வே)

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சின்னத்தம்பி 9 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று காலை 8.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Wood bine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.



**செல்வராஜா தேவராஜா**

புலோலி தெற்கு சாரையடியைப் பிறப்பிடமாகவும், டென்மார்க் Horsens ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை பிற்பகல் 2.30 மணிக்கு Vestre Kirkegard, Silkeborgvej 40, 8700 Horsens, Denmark என்னும் முகவரியில் நடைபெளறும்.



**திருமதி.மாரிமுத்து பசுபதி**

மாவை கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், மல்லாகம் நீதிமன்ற வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பசுபதி 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு நீதிமன்ற வீதி, மல்லாகம் இல்லத்தில் நடைபெறும்.



**கணபதிப்பிள்ளை சிவகுரு**

(நெல்லியடி தமிழ்ப் பூங்கா அச்சகத்தின் நிறுவனர்)

கரவெட்டி கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை சிவகுரு 9 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

# போதைப் பொருளுடன்தொடர்புடைய ஒன்றரை இலட்சம் பேர் கைதாகினர்

## கடந்த வருடங்களில்

(கொழும்பு)

போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 966 பேர் கடந்த மூன்று வருடங்களில் கைது செய்யப்பட் டுள்ளதுடன் அவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 133 கிலோ நிறையுடைய போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இறுதி வரையிலான காலப்பகுதியில் நாட்டின் சகல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இவ்வாறு பெருந்தொகையான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த மூன்று வருடங்களில் 358 கிலோ நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், சம்பவம் தொடர்பில் 51ஆயிரத்து 334 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அதேபோல ஒரு இலட்சத்து 76ஆயிரத்து 718 கிலோ நிறையுடைய கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், அச்சம்பவத்துடன் தொடர்புடைய 97ஆயிரம் 601 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் கொக்கெயின், ஹேஸ் உள்ளிட்ட வெவ்வேறு வகையான 30 கிலோ நிறையுடைய போதைப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன், அவற்றை விற்பனை செய்த மற்றும் பாவனைக்குட்படுத்திய 31 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஒன்றரை இலட்சத்து 48 ஆயிரத்து 966 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன், போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# பிக்குகள் குழு தேவாலயம் மீது தாக்குதல்.

பௌத்த பிக்குகள் உட்பட 50 பேர் கொண்ட குழுவினர் மீரிகம பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

திவுல்தெனிய நாவுல்ல பிரதேசத்தில் உள்ள இந்த தேவாலயத்தின் மீது கடந்த 8 ஆம் திகதி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். பௌத்த பிக்கு ஒருவர் வழிநடத்திய குழுவே இந்த தாக்குதலை நடத்தியதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மைய காலமாக முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ வழிப்பாட்டுத் தலங்கள் சிங்கள அடிப்படைவாதிகளின் தாக்குதலுக்குள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐ.ஐ.முன்னணி உறுப்பினர்கள் இருவர் கட்சி தாவினர்

(பூந்தோட்டம்)

ஜனநாயக ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு மாகாண சபை உறுப்பினர்களான இருவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்துள்ளதாக அக் கட்சியின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனநாயக ஐக்கிய முன்னணியில் கடந்த மேல் மாகாண சபை தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முஹம்மத் பாயில் மற்றும் அக் கட்சியில் போட்டியிட்ட அஜித் பெரேரா ஆகியோரும் அவர்களது ஆதரவாளர்களுமே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

வர்த்தக கைத்தொழில் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தலைமையில் கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற கட்சியின் உயர்பீட கூட்டத்தின் போதே இவர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், கிழக்கு மாகாண பிரதி தவிசாளர் எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமிட், பிரதி தலைவர் என்.எம்.சஹிட் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டன் பிரஜை கொலை; சந்தேக நபரை தேடி பொலிஸார் வலை வீச்சு

(கொழும்பு)

பிரித்தானிய பிரஜையான குர்ரம் ஷேக்கின் கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஆளும் கட்சியின் தங்காலை பிரதேசசபை தலைவரை கைது செய்ய முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

எனினும் அவர் எங்கிருக்கிறார் என்று இதுவரை தெரியவரவில்லை.

2011 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று இடம்பெற்ற பிரித்தானிய பிரஜையின் கொலை தொடர்பில் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்துக்கு சம்பத் விதாரன சமுகமளிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் அவர் அன்றைய தினம் சமுகம் அளிக்கவில்லை. இதனையடுத்து அவர் மீது பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்தது.

இந்தநிலையில் சுகயீனம் காரணமாக சந்தேகநபர் காலியில் உள்ள வைத்திய சாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டதாக அவருடைய நண்பர் தெரிவித்திருந்தார்.

எனினும் 8ஆம் திகதியன்று அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார் என்று வைத்தியசாலை தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையிலேயே பொலிஸார் சந்தேகநபரை தேடும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## அன்றும் இன்றும்

அன்றைய தமிழ் இளைஞர்களோ
நன்றாம் திருமணம் முடிக்க
காளையடக்கல் எனும் கவின்மிகு
வீரவிளையாட்டையாடினர்;
இன்றைய தமிழ் இளைஞர்களோ
நன்றாம் திருமணம் முடிக்க
கூடிய சீதனம் இனாம் வேண்டலெனும்
கோர விளையாட்டை ஆடுகின்றனர்;
அன்றைய தமிழ்க்குடும்பங்கள்
நன்செய் புன் செய் நிலங்களில்
சத்துள்ள தாவர பசளையையிட்டு
சுத்தமான நெல்லையும் காய்கறிகளையும்
நித்தமும் உண்டு
இத்தரணியில் மகிழ்ந்திருந்தனர்;
இன்றைய தமிழ்க்குடும்பங்களோ
சென்றிடும் அவசர உலகிற்கேற்ப
விரைவு உணவு வகைகளையும்
கிருமி நாசினி, உரம் கலந்த
பழங்கள், காய்கறிகளையுண்டு
வாழ்நாளை வீண் நாளாக்குகின்றனர்;

**புத்தூர் கு.குகன்**

## நீ கொண்ட என் இதயம்

முதல் காதல் தோன்றிய
நொடிகள்
முகம் பார்த்த அந்த
விழிகள்
எப்படியடி என்னால்
மறக்க முடியும்?
நீ மறந்துவிடு என்று
சொன்னால்கூட அது முடியாதுடா
ஏன் தெரியுமா?
இதயத்தில் நீ இருந்தால்தானே
உன்னை மறப்பதற்கு
இதயமே நீயாக இருந்தால்
எப்படியடி மறப்பது?

**வினோதா**
**உடுப்பிட்டி**



## புரியவில்லை

ஏதோ ஒரு பாரம்– என்
மனதிற்குள் அழுத்தமாக
உணரமுடியவில்லை ஏதென்று
மூச்சில்கூடத் திணறல்– என்
வார்த்தைகளிலும் தான்...
சோகத்தின் ரணம் ஒன்று
சோதனையின் சுகமொன்று
உணர்வுகளுக்குள் பாரமாய்
கதறல்பாதி பதறல் பாதி...
இன்னும் இன்னும்
எத்தனை நாட்களுக்கு
இவ் அவலம்...!

**கிரு.செந்தூரன்**
**பருத்தித்துறை**

## இமயம் தொட...

தன்னை உணவாக்கி
தன் இனத்தை பெருக்கிடும்
சிலந்தியிடம் - நீ
கற்றுக்கொள்
உண்ண உணவு தேட
வலை பின்னி
வலிமையோடு வாழும்அது
வலிமை கொண்டதே
உன்னால் உன் இனம்
வாழுமெனில்
நீ வலிமைசாலியே..!

**மாவை.நா. கஜேந்திரன்**



## பூவோடு

எங்கோ தெரிவதை பார்த்ததும்
வெட்கத்தை விட்டு
இதழ்விரிந்து சிரிக்கின்றாயே
ஒருநாள் வாழ்க்கையில்
உதிர்வதை மறந்து
எங்கோ மறைவதை பார்த்து நீ
மடிகின்றாயே
இவ்வளவு நேரமும் உன்னை
சுட்டெரித்தது இவன் என தெரியாமல்
ஆண்டவனுக்கு அழகழகாய்
அலங்கரிக்கின்றாயே–உன்னை
ஒருநாள் மட்டும் சிரிக்க
படைத்தது இவன்தான் என தெரியாமல்

**பா.சத்யா**
**அல்வாய் வடக்கு**

K-N



## தர்மம் வெல்லும்

சரிபாதி கேட்டு சரிவராத போது
காலத்தைக் கடத்தாமல்
ஆழ்மனதிலிருப்பதை
அறிந்துகொள்ள
ஐந்து ஊரானது பின்
இருப்பை நிலை நிறுத்த
வீடாகிய போதும்
பிடிவாத குணத்தால்
பிடியை இறுக்கியதால்
விடுபட வழிதேடினார்
இறுதியில் கீதை கிடைத்தது
நீதியும் தர்மமும் வென்றது

அரு.கனகராசா
சாவகச்சேரி

## அடக்கப்பட்ட இனம்

நம் நாட்டு ஆட்சியாளர்கள்
உரிமை கேட்டுப் போராடிய
தமிழினத்தை இப்படித்தான்
தம் இரும்புக் கரத்தால்
அடக்கி நசுக்கினார்கள்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## வைராக்கியம்

டேய் மூடனே!
தைரியம் இருந்தால்
உன் பிடியில் இருந்து
என்னை விட்டுப் பாரு
யானையின் காதுக்குள்
எறும்பைப்போல்
உன்னை அழித்திடுவேன்

ம.குணாளினி
மயிலிட்டியூர்

# மௌனத்தின் தேடல் – 186

## உடைத்தெறி

அதிகார வர்க்கத்தின்
இரும்புக் கரத்துள்
சிக்கித் தவிக்கும்
வாலிபனே!
அடங்கி விடாதே
இவர்களின்
அடக்குமுறைக்கு
வெளியில் வா
வந்து வீறுநடைபோடு
நாளைய உலகம்
உன் கையில்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## ஏ மனிதா!

உனக்கு இரக்கம் இல்லையா?
நீயும் மனிதன் என்பதை
மறந்து விட்டாயா?
இல்லை மறைத்து கொண்டாயா
அதற்கு உன் ஆணவம்
தலையேறிவிட்டதா- காரணம்
ஆணவத்தை களைந்து
மனிதம் அணிந்து
மனிதனாக வாழ்ந்திட
இன்றே சபதம்
எடுத்திடு மானிடா

ம.அ.மரியஜெனிற்றா
சாவகச்சேரி

## நிமிர்ந்து நில்

தமிழா!
இனவெறி பிடித்த
கொடூர அரக்கர்களின்
பிடியிலிருந்து விலகி
தலைநிமிர்ந்து போராடு

இரா.ஜெ.[illegible]
அளவாவோடை

## துரோகி

பாதகனே!
நான் யார் என்று
என் முகம் நீ காணவில்லை
நீ தமிழனுக்கு செய்த
துரோகத்திற்கு உன்னை நசுக்கி
வீசினால்தான்
என் உறவுகளின் ஆத்மா
சாந்தியடையும்

மு.தர்சிகா
மயிலங்காடு

## இனவாதம்

இனவாதப்பிடியில்
இரும்புக் கரங்களால்
இறுக்கப்பட்டு
உண்மையின் கரங்கள்
உடைக்கப்படும்
ஊடகவியலாளர்

சி.ரவிக்குமார்
திருமுறிகண்டி

## பாதையை தேடு

நண்பா நீ
மாட்டுப்பட்டது
ஒரு கையில் அல்ல
வாழ்க்கையின் பிடியில்
மற்றவனின் உதவிக்காக
நீ ஏங்குவதைவிட
உனக்கென தேடிக்கொள்
ஒரு வழியை

யாழ் நிலவன்
துன்னாலை

## அடிமை

நல்லவனாக
வாழ்ந்த ஒருவர்
ஒருவரிடம் நட்பு
கொள்கின்றார்
அந்த நண்பன்
தீயவனாக இருந்தான்
அவன் நல்லவனை
தன் கையுக்குள்
அடிமையாக்கி கொண்டான்

ஜெ.தர்சிந்தன், மயிலங்காடு

## வாழ உரிமையுண்டு

அதிகார ஆட்பலமுள்ளோர்
அப்பாவி மக்களை நசுக்கி
அடக்கி ஆள எண்ணலாமா?
நீதி நியாயம் கேட்கும்
எல்லோர்க்கும் இக்கதிதானா?
உரிமை என்பது யாவர்க்கும் சமம்
மண்ணில் பிறந்த யாவரும்
மகிழ்வாய் வாழ உரிமையுண்டு

துரை
தென்மட்டுவில்

## வீக்கம்

பொருளாதாரத்தின்
நிலை குலைவு
விலையேற்றத்தின்
பேரவலம் இன்று
மனிதனை இறுகப்
பிடித்து ஆபத்தை
எதிர்நோக்க வைக்கின்றது

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –187



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.01.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலியல் விவசாயம்

சூழலுக்கு இசைந்த விவசாயம் என்னும் எண்ணக் கருவானது உணவு போசணை நிலை, பாதுகாப்பான உணவு, மண் மற்றும் நீர் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்துக்கு உகந்த பயிர்ச்செய்கை மாற்றம், பாரம்பரிய இன விதைப் பாவனையை ஊக்கப்படுத்தல், உயிர்ப் பல்வகைமையை பாதுகாத்தல் மற்றும் இரசாயன பாவனையை குறைத்து சூழலுக்கு பாதுகாப்பான சேதன பாரம்பரிய முறைகளை பாவித்து மண் வளமாக்கல், பயிர்ப் பாதுகாப்பு செய்தல் என்பவற்றை உள்ளடக்கியதான செயற்றிட்டத்தை முன்னெடுக்க உருவாக்கப்பட்டது.


வடமாகாணத்தில் தற்போது கிணற்று நீரில் நைத்திரேற்றின் அளவு அதிகரித்து வருகின்றது. அறிமுகப்படுத்தி வரும் புதிய வர்க்கங்கள் கூடிய விளைச்சலைக் கொடுத்த போதும் பாரம்பரியமான சுவையைக் கொண்டிருப்பதில்லை. திணைக்கள சிபார்சிற்கு மேலதிகமாகவும் சில விவசாயிகள் இரசாயன பாவனையை மேற்கொண்டுவருவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே சூழலியல் விவசாயத்தை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகின்றது.

### உயிர்க்கரி என்றால் என்ன?

உயிர்க்கரி என்பது வைரமான மரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் விறகை மிகக்குறைவான அல்லது வளியற்ற சூழலில் எரித்து பெற்றுக்கொள்ளும் தூய்மையான கரித்துண்டுகளாகும்.

### உயிர்க்கரியின் நன்மைகள்.

உயிர்க்கரியிலுள்ள சிறுதுளைகள் நீரையும் வளியையும் உயர்ந்த அளவில் தக்க வைத்துக் கொள்ளும். உயிர்க்கரியை மண்ணிற்கு சேர்ப்பதன் மூலம் மேற்கூறிய நன்மைகள் கிடைப்பதோடு மண்ணில் வாழும் சாதகமான உயிர் இனங்களுக்கு தேவை



யான வாழ்விடங்களையும் அமைத்துக் கொடுக்கின்றது. இது மண்ணில் செழிப்பை கட்டியெழுப்புவதோடு மண்ணின் போசாக்கையும் தக்க வைத்து படிப்படியாக பயிர்களுக்கு வழங்குகின்றது. ஒருமுறை உயிர் கரிமண்ணிற்கு இடப்பட்டால் அது 4 ஆயிரம் வருடங்களுக்கு மேல் மண்ணில் நிலைத்திருந்து பலனைக் கொடுக்கும்.

உயிர்க்கரி உற்பத்திக்கு மக்கிப் போகாத திடமான மரத்துண்டுகள், மரம் அறுக்கும் போது கிடைக்கும் கழிவுகள், வைக்கோல், சிரட்டை, மாமரம் கத்தரிப்பதன் மூலம் பெறப்பட்ட தண்டுகள், கிளைகள், பனைமரத் தண்டு போன்றவை பயன்படுத்தப்படலாம்.

### உயிர்க்கரி தயாரிப்பது எப்படி?

சிறியளவில் உற்பத்தி செய்வதற்கு பெரிய, சிறிய பரல்கள் (பீப்பா) பயன் படுத்தலாம். சிறிய பாலினுள் தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களை இட்டு சிறியபரலை செங்கற்கள் மீது வைத்து அதன் வாய் கீழ்ப்பக்கம் இருக்கும்.

படிப்படியாக திருப்பி வைக்கவும். அதன் மீது பெரிய பரலை உட்புகுத்தவும். சிறிய பரலைச் சுற்றி 1-11 1/2 மணித்தியாலம் வரை நெருப்பு எரிக்கவும். அவை எரிந்த பின்னர் உள்ளிருக்கும் பொருளை தண்ணீரை ஊற்றி குளிர்வித்து உயிர்க்கரியை பெற்றுக் கொள்ளலாம்.




இவ்வுயிர்க்கரியை சிறு சிறு துண்டுகளாக உடைத்து மண்ணிற்கு இடுவதன் மூலம் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் மண்ணில் இருந்து உச்சபயனைப் பெற்றுக்கொள்ளலாம்.

### ஜீவாமிர்தம்

மண்ணின் வளத்தை மட்டுமன்றி நோயாளிகளிடமிருந்தும் பயிர் நிலத்தை பாதுகாக்கும் பயிர்ச்செய்கைக்கு சாதகமான நுண்ணுயிர் கலவையாகும்.

இதனை தயாரிப்பதற்கு உள்ளூர் இன மாட்டின் பச்சை சாணம் 10 கி.கி, இரண்டு நாட்கள் வெயிலில் காயவைக்கப்பட்ட கிளிசிறியா இலை 2 கி.கி, இரசாயனம் பாவிக்காது பெறப்பட்ட பழச் சாறு அல்லது சீனி , விவசாய இரசாயனம் பாவிக்கப்படாத இயற்கை சுற்றாடலில் இருந்து பெறப்பட்ட மேல்மட்ட மண் 1 கி.கி போன்ற பொருட்களை கலந்து காற்றூட்டப்பட்ட நிலையில் 2 வார காலம் வைப்பதன் மூலம் ஜீவாமிர்தம் பெறப்படும்.



மேற்படி கலவையை சேதனப் பசளை அல்லது இலைப்பசளை இட்டபின்னர் தேவையான அளவுநீர் சேர்த்துபயிர் நிலம் முழுவதற்கும் தெளித்தல் வேண்டும்.

இதன் மூலம் பயிர்களுக்கு சாதகமான நுண்ணுயிர்கள் மண்ணில் பெருகுவதுடன் பயிருக்குத் தேவையான நுண் மூலகங்கள் பிரிகையாக்கிகளினால் மண்ணிற்கு விடப்படுகின்றது.

### விசேட சேதனப் பசளை (Super Compost)

இரசாயனமற்ற எப்பாவலபாறை பொஸ்பரசு, மைக்கா என்பவற்றை பயன்படுத்தி சேதனப் பசளையைத் தயாரித்து சாதாரண சேதன பசளையை விட நான்கு மடங்கு அதிகமான நைதரசன், பொஸ்பரசு, பொற்றாசியம் என்பவற்றை மண்ணிற்கு விடுவிக்கலாம்.

### சுவாலைக் களைக்கட்டுப்பாடு (Flame weeding)

தட்டையான சிறு துவாரங்களில் சுவாலையை உருவாக்கும் எரிவாயு மூலம் இயங்கும் இயந்திரம் மூலம் மேல் மண்ணை எரிப்பதனால் களைகளைக் கட்டுப்படுத்த சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத முறையாகும்.

### செறிவான பயிர்ச்செய்கை

சூரிய ஒளியை உச்ச அளவில் பயன்படுத்தக்கூடிய வகையிலும் மண்ணின் வெவ்வேறு ஆழங்களில் உள்ள போசணையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் உயர வேறுபாடு உடைய பயிர்களை தெரிவு செய்து பயிரிடுவதன் மூலமும் உச்சப் பயனைப் பெறலாம்.

அத்துடன் உயிர்வேலிகளைப் பயன் படுத்தி முற்காலத்தில் [illegible] போல நிலத்தில் இருந்து அதிக பயனைப் பெறலாம்.

பாரம்பரிய முறைகளான பயிர்களைச் சுற்றி பாகற் கொடி வேலி போன்ற உயிர் வேலிகளையும் பயன்படுத்தலாம்.

இவற்றைவிட ஏனைய பாரம்பரிய சனல் விதைத்தல், காவிளாய், வேம்பு, பூவரசு, கிளிசீரியா இலைகுழை மற்றும் இலைச் சுருள்களை மண்ணில் புதைத்தல் என்பன பயன் மிக்க சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத முறைகளாகும்.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் முகமாக துரவு ஏற்படுத்தலாம். இதன் மூலம் நிலத்தடிநீர் பாதுகாக்கப்படுகிறது.

அதேபோல் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் விரைவாக நீர்வழங்கப்படுவதை விட குழி முறையில் தண்ணீர் ஊற்றுதல் சிறிய நாற்றுக்களுக்கு மிகவும் பயனுள்ள முறையாகும். இதன் மூலம் மிளகாயில் பெருமளவில் பனிப் பூச்சி தாக்கத்தை குறைக்கலாம்.

இவற்றை விட உயிரியல் முறையில் பயிர்ப் பாதுகாப்பு செய்தல் மிக அவசியமாகும்.

பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பீடைகளை உணவாகக் கொள்ளும் உயிரினங்களின் பெருக்கத்தை கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சிலந்தி வகை, செண்பகம், லேடி பேட் , வண்டு, சில எறும்பு வகை என்பன தற்போது அழிவடைந்து வருகின்றது. அளவுக்கு அதிகமான இரசாயனப் பாவனையால் நன்மை



பயக்கும் உயிரினங்கள் அழிவடையாது பாதுகாப்பது சுற்றாடலுக்கு மிகவும் தேவையான ஒன்றாகும்.

காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப பயிர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். இதற்கு எமது பாரம்பரிய இனங்கள் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப தப்பிப் பிழைக்கக் கூடியனவாகும்.

இவற்றை பயிரிடுவதை ஊக்கப்படுத்துவதன் மூலம் காலநிலைப்பாதிப்பால் ஏற்படும் பயிர் அழிவைக் குறைக்கலாம்.

சனல் போன்ற தாவரங்களை மிக நெருக்கமாக பயிரிடுவதன் மூலம் மண்ணின் நைதரசன் வளம் அதிகரிக்கப்படுவதோடு களைகளையும் கட்டுப்படுத்த முடியும்.

ஏனெனில் களைகளுக்கு போதிய சூரிய ஒளி கிடைக்காமையால் அவை அழிந்து விடும்.

இதனால் அடுத்த போகத்தில் களைகளின் ஆதிக்கம் குறையும். பனையோலையினால் நிலத்தை மூடுதல் மற்றும் பட்டி முறையில் செம்மறி ஆடு மற்றும் மாடு வளர்த்தல் என்பனவும் களைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய முறைகளாகும்.

வடமத்திய மாகாணத்தில் சென்ற போகத்தில் ஒருங்கிணைந்த சூழலுக்கு நேசமான விவசாயமானது பரீட்சார்த்தமாக பாரம்பரிய இனங்களை பயிரிட்டு இரசாயன பாவனையற்ற சூழலுக்கு சாதகமான முறைகளை பாவித்து பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் பட்டது.

இதன்போது ஏக்கருக்குரிய விளைச்சல் குறைவாக கிடைக்கப் பெற்றபோதும் விவசாயிகள் கூடியளவு வருமானத்தை பெற்றுக் கொண்டனர்.

அங்கு பெறப்பட்ட அனுபவம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வட மாகாணத்தில் சேதன விவசாயத்தை திட்டமிடுவதற்கு பேருதவியாக இருக்கும்.

சூழலுக்கு நேசமான விவசாயம் தொடர்பான பயிற்சிபட்டறை ஒன்று வடமாகாண விவசாயத் திணைக்களத்தினால் வடமேல் மாகாண விவசாயத் திணைக்களம், காலநிலை மாற்றங்கள் மற்றும் விவசாயப் பிரச்சினைகளுக்கான மக்கள் மாற்றுச் செயற்றிட்டம் (MONLAR) Oxfam Australia என்பவற்றின் அனுசரணையுடன் கடந்த மார்கழி மாதம் 17, 18 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது வடமாகாண விவசாய கமநலசேவைகள், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் பிரதம விருந் தினராக கலந்து கொண்டார்.

இப் பயிற்சி பட்டறையின் இறுதியில் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்குமான 5 வருடத்துக்கான விவசாயத் திட்டம் சூழலுக்கு நேசமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய படிமுறைகள் தயாரிக்கப்பட்டன.

**சி.சிவகுமார்**
**விவசாய பணிப்பாளர்**
**வடமாகாணம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிந்திய ஆதிக்கம்! ஈழத்தில் எடுத்த பலி போதவில்லையா ?

**இந்து பத்திரிகையின் ராம் என்ற ஊடகரின் -தமிழ் மக்களின் தாயகக் கோபாடு சார்ந்த- கருத்துக்கள்- அவர்அளித்த செவ்வியிலிருந்து...**

..."தமிழீழம்.. அரசியல்ரீதியாக, பொருளாதார ரீதியாக, புவியரசியல ரீதியாக நீடிக்க வாய்ப்பே இல்லாதது அது. முக்கியமாக, வியூக முக்கியத்துவம். அந்தப் பகுதியை ராணுவ ரீதியாக யாரும விட்டு வைக்க மாட்டார்கள் - ஒருபோதும் அது நீடிக்க முடியாதது. கடைசியில் அதுதான் நிரூபிக்கப்படடிருக்கிறது. ஆகையால், ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பின கீழ், சுயாட்சிக்கு இணையான உச்சபட்ச அதிகாரப் பகிர்வுதான் இலங்கைத் தமிழர்களுக்கு அமைதியையும் நன்மைகளையும் தருமேயன்றி பிரிவினை அல்ல......



இந்து பத்திரிகையின் ஊடகர் ராம்

.....தொடக்கம் முதலே 'தி இந்து' தனித் தமிழீழம் என்ற கருத்தாக்கத்தை எதிர்த்தே வந்திருக்கிறது. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையும் அதுதான். அரசியல் சாத்தியமே இல்லாதது தமிழீழம் அது அமைந்தால் நல்லதும் அல்ல.""

**மேலே** கட்டத்துக்குள அரசியல கருத்துக்களை முன்வைத்திருப்பவர் "இந்து" பத்திரிகையின் ராம் என்கிற ஊடகர்.

தமிழில் வெளிவரும் " இந்து" பத்திரிகைக்கு அவர் வழங்கிய நேர்காணலில், இந்தியாவின் பிராந்திய- பூகோள அரசியல் நிலைப்பாடு குறித்து, அவர் உதிர்த்த மேலாண்மைக் கருத்தாகவும் இதனைக் கொள்ளலாம்.

தமிழீழ விடுதலைக்காக, இயககங்கள் ஆயுதப்போராட்டம் செய்த போது, அவற்றிக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியது இநதியா என்பது ராமிற்கு தெரியும்.

நடுவண் அரசானது, அந்த ஆயுதங்களை தமிழ் ஈழம் அடைவதற்குக் கொடுக்கவில்லை என்பதையும் ராம் அறிவார்.

மாக்சிசத்தின் இயங்கியல் தத்துவத்தை புரிந்து கொண்ட ஊடகர் ராம், இலங்கை அரசினை அடிபணிய வைப்பதற்கு, ஈழப் போராட்டத்தினை ஒரு அழுத்தக் கருவியாக இந்தியா பயன்படுத்தியது என்கிற மூலோபாய உணமையையும் அவர் கணித்திருபபார்.

இப்போதும் அதையேதான் இந்திய நடுவண் அரசு செய்கிறது.

அதேவேளை, இலங்கை அரசு வரைந்து கொடுத்து, இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13- வது திருத்தச் சட்டம் என்பது, சுயாட்சிக்கு இணையான உச்சபட்ச அதிகாரப பகிர்வு அல்ல என்பதை, ராமினால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால் இதைவிட அபத்தம் வேறொன்றுமில்லை.

இலங்கை அரசிற்கு அலுப்புக் கொடுக்கக் கூடிய அளவிற்கு ஈழப் போராட்டத்தின் வலு இருக்க வேண்டுமே தவிர, இந்து சமுத் திரப் பிராந்தியத்தின் கடல் ஆதிக் கத்தை நிர்ணயம் செய்யக்கூடிய சக்தியாக அது மாறிவிடக் கூடா தென்பதில், இந்தியா உறுதியாக இருந்தது என்பதை இவர் போடடுடைத்துள்ளார்.

அதாவது இறுதிப்போரில், அனைத்து முரண்பட்ட தரப்புக்களும் இணைந்து விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தினை அழிக்க உதவி புரிந்தார்கள் என்பதை ராமின் கருத்து உறுதிப்படுத்துகிறது.

"அந்தப்பகுதியை இராணுவரீதியாக யாரும் விட்டுவைக்க மாடடார்கள்" என்று அவர் சொல்லும் வியாக்கியானமும் இதையே குறிபபிடுகிறது.

ஆகவே இலங்கை ஒன்றுபட்டு இருக்க வேண்டுமென்பதற்காக, ஒரு தேசிய இனத்தின் மீதான இனவழிப்பு நியாயப்படுத்தப்படுகிறது என்பதாக இருக்கிறது ராமின் வாதம்.

அதேவேளை, "இனப்பிரச்சினைக்கான தீர்வு பூரண சுயாட்சி" என்கிற மந்திர உச்சாடனத்தை உச்சரிக்க இவர்கள் எப்போதும் தவறுவதில்லை.

இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள விரும்பாத, அதனை ஆலோசிப்பதற்கே மறுக்கும் தீர்வுகளை இவர்கள் ஒரு பேச்சுக்காக முனவைப்பார்கள்.

ஒரு தேசிய இனத்தின் சுயாட்சி உரிமையைக்கூட சிங்களம் ஏற்றுக்கொள்ளாது என்று அவர்களுக்கே தெரியும்.

ஆனாலும் தமிழீழம் என்பதற்கான வாய்ப்பு, அரசியல் புவியியல் ரீதியாக இல்லை என்று மிக அழுத்தமாக நிறுவமுற்படும் ராம், அதற்கான அடித்தளத்தினை சீனாவின் வரவு இந்துசமுத்திரப் பிராநதியத்தில் ஏற்படுத்திவிட்டது என்கிற புவிசார் அரசியல் நிதர்சனத்தை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. அவ்வாறான புதிய தளம் குறித்து பேசமுற்பட்டால், சீனாவின் மீதான தன் மென்போக்கு அமபலமாகிவிடுமோ என்கிற அச்சம் ஒரு காரணியாக இருக்கலாம்.

அதேவேளை தமிழ் "இந்து" பத்திரிகையில் ஏன் இந்த நேரகாணல் வந்தது, அதற்கான உளநோக்கம் ஏதாவது இருக்குமா என கிற கேள்வியும் எழுகிறது.

ஆங்கில "இந்து"வானது, இந்திய வெளியுறவு கொள்கை வகுபபாளர் மற்றும் நகர்புற ஆளும் அரசியல்வாதிகள் மத்தியில் இலங்கை குறித்த பார்வையில், ஈழத்தமிழினத்திற்கு விரோதமான அல்லது அவர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான போக்கினை வளர்க்க உதவியது.

இதுமட்டும் போதுமானதல்ல, மத்திய அரசிற்கு நெருக்கடிகளை கொடுக்கும் தமிழக மக்களிடமும், இந்த ஈழ எதிர்ப்புப் போக்கினை விதைத்திட வேண்டும் என்பது தான், தமிழ் "இந்து"வின் ஆசை.

மாணவர் போராட்ட அமைப்புக்கள், மே 17 இயக்கம், நாம் தமிழர் கட்சி போன்றவற்றின் சர்வதேச அரசியல் புரிதல்களோடு கூடிய போராட்ட முன்னெடுப்புக்கள் என்பன, தமிழகத்தின் மீதான இந்துவின் தமிழ் தேசிய எதிர்ப்புக் கருத்தாக்கத்தினை சிதைத்து விடடது என்கிற இருப்புநிலை யதார்த்தத்தினை உணர்ந்ததால், இந்தத் தமிழ் "இந்து"வின் வருகை இடம் பெறுவதாக கருதினாலும் தவறில்லை.

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த இனப்படுகொலையை மூடிமறைக்க அல்லது திசை திருப்ப, பிரபாகரன் அவர்களை **போல் பொட்டுடன்** ஒப்பீடு செய்தும், சுயநிர்ணய உரிமைப்போரினை பயங்கரவாத போராட்டமாகக் சித்தரித்தும், தமது பிராந்திய மேலாதிக்க நலனை நிலைநாட்ட துடிக்கும் இந்திய அதிகார வர்க்கத்திற்கு முண்டு கொடுக்கும், மார்க்சிசம் பேசும் மதவாதப் பத்திரிகையிலிருந்து வேறெதை எதிர்பார்க்க முடியும்.

"போராட்டத்தினை அழித்தது நியாயம்" என்று ராம் போன்றவர்கள் உரத்துச் சொல்லும் அதே வேளை, மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடருக்கு முன்பாக, தமிழர் தரப்பிடம் நல்லிணக்க அரசியலை விற்றுவிட, இன்னொரு தரப்பு துடித்துக் கொணடிருப்பதைக் காணலாம்.

இலங்கை ஆட்சியாளர்களின் ஆசியோடு, உண்மையும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு (Truth & Reconciliation Commission ) என்கிற தென்னாபிரிக்க திரைக்கதையோடு வருகிறார் இந்திய-இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அற்புதமானது என்று புகழாரம் சூட்டும் தூதுவர், இத்தோடு இன்னொரு டி.ஆர்.சியை அமைத்தால் நன்றாக இருக்கும் என்கிற கருத்தினை வெளியிட்டுள்ளார்.

ஆனாலும் தென்னாபிரிக்காவில் ஒரு தீர்வுத்திட்டம் எட்டப்பட்ட பின்பே, இந்த TRC அங்கு ஏற்படுத்தப்பட்டது என்று கூறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், தொடரும் கட்டமைப்பு சார் இனவழிப்பினை நிறுத்தாமல், அத்தோடு தீர்வொன்றினை எட்டாமல், இம்மாதம் தென்னாபிரிக்காவில் நடை பெறும் இந்த TRC இற்கான கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கலந்து கொண்டால், அது தமிழ் மக்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகவே பார்க்கப்படும் என கிறார்.

சர்வதேசத்தின் மேற் பார்வையில், அரசியலமைப்பிற்கு அப்பால், நிலை மாற்று கால நிர்வாகம் ஒன்று வட-கிழக்கில் நிறுவப்பட வேண்டும் என்பதனை தொடர்ச்சியாக வலியுறுத்தும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், இதன் பின்னரே, அருட்தந்தை. எழில் ராஜன் குறிப்பிடும் நிலைமாற்றுகால நீதியினைப் ( Transitional Justice ) பெறுவதற்கான சிலி தேசத்து பொறிமுறை ஒன்றினை உள் நாடடிலோ அல்லது வெளிநாட்டிலோ நிறுவலாம் என்று எண்ணுகிறாரகளோ தெரியவில்லை.

தென்னாபிரிக்காவின் முயற்சியானது, ஐ.நா.மனித உரிமை பேரவை முன்வைக்கப்போகும் தீர்மானங்களில் இருந்து இலங்கை அரசை காப்பாற்ற எடுக்கும் நகரவாக இவர்களால் பார்க்கப்படுகிறது. இதற்கு உலகத்தமிழர் பேரவையும், புலம் பெயர் கூட்டமைப்புக் கிளைகளும் இணைந்து அனுசரணை வழங்குவதாக செய்திகள் வருகின்றன.

இலங்கையில், ஈழத்தமிழினத்தின் மீது இனஅடியழிப்பு நிகழவில்லை என்று கூறும் நாடாளுமன்ற உறுப்பினரின் கைவண்ணங்கள் இந்த தெனனாபிரிக்க திரைக்கதையில் இருபபதாக பலரும் நம்புகின்றார்கள்.

பேரினவாத அரசைக் காபபாற்ற, இந்தியாவிலும் இலங்கையிலும் சில முகவர்கள் தீவிரமாகத்தான் இயங்குகின்றார்கள்.

ஈழமக்கள் இந்த அரசியல் நகர்வுகளை ஆழமாக கவனிக்கத் தவறின் இந்திய வல்லாதிக்கதினதும் இலங்கை சர்வாதிகாரத்தினதும் பேராசைகள் நிறைவேற்றப்படுவதற்கு இந்த வரலாற்றுத் தருணமும் வழிவகுக்கலாம...!

-இதயச்சந்திரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சட்டத்தை மதிக்காத சமூகம் நீதி வழங்க தகுதியற்றது !



தெருவில் சயிக்கிள் ஓட்ட வேண்டும் என்றால், அதற்கான சட்டங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும், இல்லையா?

அதேபோல, இந்த நாட்டில் நீங்கள் வாழவேண்டும் என்னறால், குறிப்பிட்ட சில சட்டங்களெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். பக்கத்து வீட்டுக்காரரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளும் விடயம் இல்லை இது. அதற்குச் சரியான கல்வி தேவை. இதுதான் சட்டம், இதை மீறினால், இது, தண்டனை என்று, அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும் தானே?

அதன் பின்னர், சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நடைமுறைப்படுத்துவது அத்தனை சுலபம் அல்ல. சட்டத்தை இயற்றுவதே மிகவும் சிக்கலான விடயம். அதை நடைமுறைப் படுத்துவது அதைவிட சிக்கலான விடயம். ஏனென்றால், இங்குதான் நீதியும், அநீதியும் புகுந்துவிடுகின்றன. எனவே, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நாம் இந்த நீதி, நியாயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, சட்டத்தை அப்படியே பின்பற்ற வேண்டும். சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள், சில நேரங்களில் அநீதி



யான வழிகளிலும் நடைமுறைப் படுத்தலாம். இதை மக்கள் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளவேண்டும். அப்படிப் பொறுத்துக்கொள்ள வில்லை

யென்றால், பிறகு, ஒரு ஒழுங்கில்லாத, சட்டங்களில்லாத சமுதாயம்தான் அமையும். பிறகு, பழிவாங்குவதே உங்கள் பாதையாகிவிடும். ஆனால், அதை நாம் நீதி என்று அழைப்போம். நீதி என்று முத்திரை குத்தி, ஒருவரை ஒருவர் பழிவாங்கிக்கொண்டிருப்போம்.

மக்கள் ஒரவரையொருவர் சுட்டுக்கொல்வது போன்ற பல விடயங்கள் ஏன் நடக்கின்றன என்றால், இதுதான் நீதி வழங்குவது என்று அவர்கள் நிமனைக்கிறார்கள். ஏன்றால், இப்பொது இருக்கும் சட்டங்கள் விவேகமானதாக இல்லை.

எனவே, சட்டத்துக்கு உட்பட்டு முன்னேறிச் செல்வதற்கு நீங்கள் ஒரு மனப்பூர்வமான தியாகத்தை செய்ய வேண்டும். "நான் நீதி கேட்க மாட்டேன். என்மேல் சட்ட, திட்டங்களை சுமத்துங்கள். அது எந்தவிதமான சட்டமாக இருந்தாலும், அதை நான் கடைப்பிடிப்பேன். என்னைப்

## ஆன்மீகம் 90

பொறுத்தவரை அது நியாயமில்லாததாகத் தோன்றினாலும் இப்போதைக்குச் சட்டத்தின்படியே நடப்பேன்" என்பதுதான் அந்த மனப்பூர்வமான தியாகம். அந்த சட்டம் மிகவும் அநீதியானதாக இருந்தால், அதை மறுசீரமைப்பதைப் பற்றி நாம் யோசிக்கலாம். ஆனால், சட்டம் இல்லையேல் நீதியும் இல்லை.

தாமாக நீதி வழங்குவதற்கு யாருக்கும் தன்னிச்சையான அதிகாரம் கிடையாது. என்பதை நாம் நிலைநாட்டிட வேண்டும். இந்த ஒரு விடயத்தை நாம் இதுவரை செய்யவில்லை.

-சத்குரு ஜக்கி வாசுதேவ்-





# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

12

நடிகையர் திலகம் செம்மலுடன் மூன்று படங்களில் நடித்தார். *மகாதேவி* க்குப் பின், *பூரிசு* என்ற படம். அதில் காதல் நிறைவேறாத ஒரு சோகப் பாத்திரம். அதிலும் நெருக்கமில்லை.

பிறகு, தேவர் படமான வேட்டைக் காரனில் செம்மலுடன் நடித்தார். அதில் தலைவரே கொஞ்சம் நெருக்க




மாக காட்சி அமைக்கலாம் என்றார்.

"ஏன் முதலில் மறுத்தீர்களே?" என்று கேட்க, சிரித்துவிட்டு காரணம் சொன்னார்:

"நடிகை ரசிகர்களின் சொத்து. ஒவ்வொருவரும் அவரை தன் காதலியாக நினைப்பர் எதுவரை...? அவருக்குக் கல்யாணம் ஆகிவிட்டால் அவள் ஒருவனுக்கு உடமை என்று ஒதுக்கி விடுகிறார்கள். இதனால் தான் கல்யாணத்துக்குப் பிறகு நடிகை சோபிப்பதில்லை. ஆனால், சாவித்திரி இந்த நிலையை மாற்றிவிட்டார். மக்கள் நினைப்பை நடிப்பில் கவர்ந்து மனநிலையை மாற்றிய புரட்சிக்காரி சாவித்திரி, தன் நடிப்புத் திறமையால் எதையும் மறக்க வைத்துவிடுகிறார். அதனால் தான், இதில் மாற்றம் தேவை என்றேன்" என்று சொன்னார்.

*மகாதேவியில்* நாயகன் கண் குத்தப்படும். கையில் ஏந்திய குழந்தையுடன் அதைக் கண்டு நாயகி அலறித் துடிப்பாள்.

இந்தக் காட்சியில் உணர்ச்சி பொங்க நடித்த சாவித்திரி, கையில் வைத்திருந்த குழந்தையைக் கீழே போட்டு விட்டார்.

குழந்தைக்கு அடிபட்டுவிட்டது. அதை உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல செம்மலே ஏற்பாடு செய்துவிட்டு,-தன்தவறை நினைத்துக் கலங்கிய சாவித்திரியிடம்-

"அம்மா நீ உணர்ச்சிவசப்பட்டவ, நீ இயற்கை நடிகை. இருந்தாலும், நடிப்பு என்பது செயற்கை, உணர்ச்சியாக நடிக்கலாம். உணர்ச்சிவசப்படக் கூடாது. காதலோ கோபமோ சோகமோ, முகத்தோடு சரி, அதை மனதில் சேர்க்கக் கூடாது" என்றார்.

காலச்சக்கரம் ஓடியது.

சாவித்திரியின் மரணச் செய்தியைச் சொன்னோம். பொன் மனச்செம்மல் வருந்தி, "அவர் ஒத்திகையில்லாத நடிகை. ஆனா, சாவுக்கு ஒத்திகை பார்த்துவிட்டார் கோமாங்கிற பெயரிலே" என்றார்.


தமிழ்த்தாய் [illegible]

*அடுத்தவர்கள் [illegible] நினைத்தாலும் ஆண்டவன் நினைத்ததே நடக்கும்.* இந்த சுலோகத்துடன் அரிவாள், சுத்தி கொண்ட கம்யூனிச சின்னத்துடன் தொடங்கும் மஹ்பூப் புரொடொக்ஷன்ஸ் நினைவிருக்கலாம்.

புரட்சிக்கருத்துக்களைப் புகுத்திப் படமெடுத்த பெரியவர் மெஹபூப் கான் மிகுந்த பொருட் செலவில் திலீப் குமாரை வைத்து எடுத்து வெற்றிகரமாக ஓடி, தமிழ் மொழியில் டப்



நடிகையர் திலகம் சாவித்திரியின் சொந்த மாநிலமான ஆந்திரா, அவருக்கு மிக உயரமான சிலை வைத்திருந்தது. அதன் பகுதித் தோற்றம்.



செய்யப்பட்ட படம் *ஆன்.* மஹ்பூப் தென்னிந்திய வர்த்தக சபையின் இருபத்தைந்தாவது ஆண்டு (வெள்ளி விழா) விழாவுக்கு வந்திருந்தார். அவருக்கும் அவருடன் வந்த குழுவினருக் கும் வரவேற்பு கொடுக்கப்பட்டது.

முதலில் கன்னிமாரா ஹோட்டலில் விருந்து. அதற்கு செம்மல் வந்திருந்தார். மஹ்பூப்பின் பக்கத்தில் அமர்ந்திருந்தார்.... *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை பதில் கூறவேண்டும்

### டுவிட்டரில் பிரித்தானியா வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை மனிதவுரிமைகள் தொடர்பிலும் பதில் கூறும் கடப்பாடு தொடர்பிலும் முன்னேற்றத்தைக்காண வேண்டும் என பிரித்தானிய வெளிவிவகாரம் தொடர்பான செயலகத்தின் இராஜாங்க அமைச்சர் ஹியூகோ சுவயர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற அமைப்புக்கள் சிலவற்றின் பிரதிநிதிகளை சந்தித்தபோதே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்.

அவரின் இந்த கருத்துக்களை டுவிட்டர் இணைய பக்கத்தின் ஊடாகவும், பிரசித்தப்படுத்தியுள்ளார்.

அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊடாக இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை மற்றும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்கான பிரித்தானியாவின் ஒத்துழைப்பு தொடர்பிலும், அமைச்சர் இதன் போது கவனம் செலுத்தியுள்ளார். (அ-2)

## சிறையில் இருந்து கொண்டே பணமோசடி செய்த நபர்

(கொழும்பு)

ஜனாதிபதி விசாரணைப் பிரிவின் எனக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்டு வரும் கும்பல் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

சிலாபம் பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி தொலை பேசி மூலம் அழைப்பை ஏற்படுத்திய நபர், ஜனாதிபதி விசாரணைப் பிரிவை சேர்ந்தவர் எனவும் அரசாங்கத்துக்கு சொந்தமான காணியொன்றை விற்பனை செய்துள்ளதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அதனை விசாரணை செய்யாதிருக்க 5 இலட்சம் ரூபாவை தனது வங்கிக்கணக்கில் வைப்பிலிடுமாறும் கோரியுள்ளார்.

குறித்த நபர் வழங்கியுள்ள வங்கிக்கணக்கிற்கு அந்த காணி உரிமையாளர் கோரிய பணத்தொகையை வைப்புச் செய்துள்ளதாகவும் பின்னரேயே தான் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன அதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட நபர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு தொலைபேசியில் கதைத்துள்ள நபர், நீர்கொழும்பு சிறைச்சாலையில் உள்ள தங்கொடுவை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்தது. வைப்பிலிட்ட 5 இலட்சம் ரூபா பணத்தை சிறைச்சாலையில் உள்ள நபரின் மனைவியும் பிரிதொரு நபருமே பெற்றுக் கொண்டுள்ளனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டு மாரவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# சட்ட ஆட்சியை நிலைநிறுத்தும் வரை போராட்டம் ஓயப் போவதில்லை

## சட்டத்தரணிகள் குழாம் தெரிவிப்பு

**(கொழும்பு) முன்னாள் பிர்தம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு வதை செய்வதை நிறுத்தும்படி அரசாங்கத்தை வலியுறுத்தும் அதேவேளை, அவருக்கு நீதி பெற்றுக் கொடுப்பதற்காக சகல வழிகளிலும் முயற்சி எடுக்கப்போதாக ஜனநாயகத்துக்கான சட்டவுரைஞர்கள் கூறியுள்ளனர்.**

இது தொடர்பில், சட்டத்தரணி ஜே.சி வெலியமுன்ன கூறியுள்ளதாவது,

"சட்டவிரோதமாக பதவி விலக்கப்பட்டு ஒருவருடமாகிவிட்ட போதிலும் கலாநிதி சிராணி பண்டாரநாயக்க இப்போதும் வதை செய்யப்பட்டு வருகின்றார். அடிக்கடி நீதிமன்றங்களுக்கு அல்லது இலஞ்ச ஆணைக்குழுவுக்கு வரும்படி அழைப்பாணைகள் இவருக்கு அனுப்பப்படுகின்றன. இது நிறுத்தப்படவேண்டும்.

இதற்காக சிவில் சமூக குழுக்களுடனும் சர்வதேச நிறுவனங்களுடனும் சேர்ந்து சட்டத்துறை நண்பர்கள் பல இயக்கங்களை தொடங்கவுள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

இலங்கை சட்டத்தரணிகள் குழாம் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணியான ஜே.சி.வெலியமுன்ன தலைமையில் நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்ற சட்டத்தரணிகள் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் உயர்நீதிமன்ற நீதிமன்றத்தின் 43ஆவது பிரதம நீதியரசராக பதவி வகித்த கலாநிதி சிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்து கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒருவருடம் நிறைவடைந்துள்ளது.

இதன் போது சட்டத்தரணிகள் குழாம் அமைப்பாளர்கள் தமது உரையில்,

இலங்கையின் 43ஆவது உயர்நீதிமன்ற பிரதம நீதியரசராக பதவி வகித்த அவரை அரசியலமைப்பு சட்டத்திற்கு மாறாக உயர் நீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்களையும் உதாசீனம் செய்து பழிவாங்கும் நோக்கத்தில் நியாயமற்ற முறையில் 6 மணித்தியாலயங்களில் 16 சாட்சிகளை அழைத்து வாக்குமூலங்களைப் பெற்று பதவி நீக்கம் செய்யப்பட்டு ஒரு வருடம் நிறைவு பெறுகின்றது.

இந்த அரசின் சர்வாதிகாரத்தனமான இச்செயற்பாட்டை எதிர்க்கட்சிகள், பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள், பல்வேறு பிறநாட்டு அரசுகள், இலங்கையின் வழக்குரைஞர் கழகம் உட்பட்டோர் கடுமையாக விமர்சித்திருந்தனர் .


இந்தப் பதவி நீக்கத்திற்கு எதிராக நீதிமன்றங்களின் சுதந்திரத்தை மீட்டெடுத்து சட்ட ஆட்சியை நிலை நிறுத்தும் வரை இப்போராட்டங்கள் ஓயப்போவதில்லை.

அதற்காக இந் நாட்டு சகல துறைசார் மக்களும் பங்களிப்பை வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.

இந் நாட்டின் ஜனாதிபதி பொது நலவாய நாடுகளின் தலைவராக பதவி ஏற்றுள்ள இந் நிலையில் பொதுநலவாய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்ட ஆட்சியின் விதிமுறைகளை இலங்கையிலும் பின்பற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து ஹிட்லர் ஆட்சியை நோக்கிய அராஜக பாணியிலான சட்டரீதியற்ற ஆட்சியை நோக்கி இலங்கை சென்று கொண்டிருக்கின்றது என குற்றம் சாட்டினர்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான சிறிநந் பெரேரா, ஜயம்பதி விக்ரமசிங்க மனித உரிமைகள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் அத்தியட்சகரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.எஸ்.ரட்னவேல் மனித உரிமை ஆர்வலரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கௌரிசங்கரி தவராசா உட்பட பெரும்பாலான சட்டத்தரணிகளும் பங்கேற்றனர். (அ-2)





யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையின் தனிநாயகம் முத்தமிழ் மன்றத் தின் வெளியீடாக அப் பாடசாலையின் நாடகமும் அரங்கியலும் பாடத்தின் ஆசிரியர் யோ. யோண்சன் ராஜ்குமார் எழுதிய அமைதிப் பூங்கா என்னும் சிறுவர் நாடக நூலின் வெளியீட்டு விழா அண் மையில் பாடசாலை யின் மண்ட பத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நூலின் முதற் பிரதியை பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட திருமறைக் கலாமன்ற இயக்கு நர் நீ.மரியசேவி யர் அடிகளாரிடமிருந்து ஈழத்தின் மூத்த மெல்லி சைக் கலைஞர் வி.அன்ரன் டேவிற் பெற்றுக் கொள் வதையும் படங்களில் காணலாம்.

## சபாநாயகர் பதவியை பெற்றுக் கொள்ளேன்

### அமரதுங்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் இணைந்து கொண்டு சபாநாயகர் பதவியை பெற்றுகொள்ள மாட்டேன். அரசாங்கத்தில் இணையும் நோக்கம் தனக்கு இல்லையென்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவுடன் மத்திய கிழக்கு நாட்டிற்கு விஜயத்தைமேற்கொண்டு நேற்று முன்தினம் காலை நாடு திரும்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தான் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் தனது தனிப்பட்ட ஆவணங்களை அகற்றிக்கொண்டதாக வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லையென்றும் அவர் கூறினார். (அ-2)

## போதைப்பொருள் பாவனை; 52 மாணவர்கள் கைது

(கொழும்பு)

தனியார் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 52 மாணவர்கள் போதைப் பொருள பாவனையின் போது பொலிஸாரினால் கையும் களவுமாகப்பிடிக்கப்பட்டனர்.


மேற்படி சந்தேக நபர்கள் கொள்ளுப்பிட்டிய பகுதியில் பல்வேறு இடங்களில் போதைப்பொருள் பாவனையின் போது கைதாகியுள்ளனர். அதில் ஒருவர் பல்கலைக்கழக மாணவன் என்றும் ஏனையோர் தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

மேற்படி மாணவர்களை கொழும்பு நீதவான் திலின கமகே முன்னிலையில் கொள்ளுப்பிட்டிய பொலிஸார் ஆஜர்படுத்தினர். அச் சந்தரப்பத்தில் குறித்த மாணவர்கள் அனைவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 26ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சி முறைமை வடக்கு மாகாண மக்களுக்கு தேவையில்லை

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(கொழும்பு)

**தமிழ் மக்களின் மொழி, கலை, கலாசாரம் தெரியாத இராணுவ ஆட்சி முறைமை தமிழர்களுக்கு தேவையில்லை என வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நேற்றுநடைபெற்ற "வடக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தல்" என்னும் தொனிப்பொருளில் மாகாண சபை உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கிடையிலான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் வாழ்கின்ற மக்கள் பாதுகாப்பையும், சுதந்திரத்தையுமே எதிர்பார்க்கின்றார்கள். தவிர பெருந்தெருக்கள் அமைப்பதையோ, விடுதிகள் அமைப்பதையோ விரும்பவில்லை. போருக்குப் பிந்திய காலத்தில் மக்களின் பாதுகாப்பும் சுதந்திரமும் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று அவர் தெரிவித்தார். வடமாகாணசபை உருவாக்கப்பட்டு 3மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ன செய்கிறார்கள் என மக்கள் மத்தியில் கேள்விகள் பல எழுந்துள்ளன. முதற்கட்டமாக கிராம மட்டத்தில் தொழில்சார் முன்னேற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். வடக்கிலிருந்து பல கல்விமான்கள் , புத்திஜீவிகள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். மீளவும் அவர்கள் இங்கே வருவதற்கு பாதுகாப்பு இல்லை என்ற ஒரு காரணத்தினாலேயே அவர்கள் இங்கே வருவதை தவிர்க்கின்றார்கள் அவர்கள் இங்கு மீளவும் வந்து பிரதேசத்தை அபிவிருத்தியடையச் செய்வதற்கு அவர்களது பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு, அரசாங்கத்துடன், பேசவுள்ளோம் என்றார். எங்கள் மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் போரின் பின்னரும் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமலும், தமது விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை இன்றும் காணப்பட்டு வருகின்றது. அகதி முகாம்களில் வாழ்வாதார நெருக்கு வாரங்களுக்கு மத்தியில் எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் எமது மக்களின் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதோடு எமது நிலங்களில் இராணுவம் விவசாய நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார். சகல சமூகங்களும் இணைந்து ஒற்றுமையினை நாங்கள் விரும்புகின்றோம் தமிழ் மக்களின் மொழி, கலை, கலாசாரம்தெரியாத இராணுவ ஆட்சி முறைமை வடக்கு தமிழர்களுக்கு தேவையில்லை. இதனால் தான் இராணுவப் பின்னணி கொண்ட ஒருவர் ஆளுநராக இருப்பதை நாங்கள் எதிர்ப்பதோடு சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளுநராக வரவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த செயலமர் வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகை, மாகாண சபை உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)



வடமராட்சி லயன் கழக உறுப்பினர்களின் ஏற்பாட்டில் பருத்தித்துறை சுப்பர்மடம் மயானப் பகுதியில் பனை விதைகள் நாட்டப்பட்ட போது...

(படம்:- பருத்தித்துறை செய்தியாளர்)

### தேடுதல் மூலம் 82 மில்லியன் ரூபாய் வருவாய் கிடைத்தது

(கொழும்பு)

நாடு முழுவதும் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் மூலம் 82 மில்லியன் ரூபா வருவாய் கிடைத்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மட்டும் 50 ஆயிரம் தேடுதல்கள் நடத்தப்பட்டதுடன் நுகர்வோர் சட்டத்தை மீறிய 25 ஆயிரத்து 117 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான தேடுதல்கள் நடத்தப்பட்டதுடன் 3 ஆயிரத்து 24 தேடுதல்கள் நடத்தப்பட்டன. (அ-2)

## மன்னார் புதைகுழி தொடர்பில் சுயாதீன விசாரணை வேண்டும்

### அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை

(கொழும்பு)

திருக்கேதீஸ்வர புண்ணிய பூமியில்மனிதஉடல்கள்புதைக்கப்பட்டிருப்பதாகவும்மண்ணை அகழ்ந்த பொழுது எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் இப்பொழுது விசாரணைகளிலிருந்து அறிய வந்திருக்கிறது. நீதிமன்ற மேற்பார்வையில் விசாரணைகள் நடப்பதாகவும் ஊடகச் செய்திகளிலிருந்து அறிகின்றோம். நீதிமன்றம் நீதிப்படியும் நியாயப்படியும் முறையான விசாரணைகளை செய்து முடிவினை அறிவிக்கும் என நம்புகின்றோம் என அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

இந்துமாமன்றம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்,

திருக்கேதீஸ்வரப் புண்ணிய பூமியில் மனித உடல்கள் புதைக்கப்பட்டு இருப்பதைப் பற்றிய முழுமையான சுயாதீன விசாரணை நடக்க வேண்டும் எனப்பகிரங்க வேண்டுகோள் விடுவதுடன் அதற்கு ஆண்டவனருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உரிய கட்டத்தில் பொருத்தமான ஆலோசனையைப் பெற்று அகில இலங்கை இந்துமாமன்றம் நடவடிக்கை எடுக்கும். நீதிமன்ற விசாரணைகள் நடக்கின்ற இக் கட்டத்தில்இதுசம்பந்தமாகமேலும் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. மனித உடல்களைப் புதைக்கும் (கொலைகளை மறைக்கச் செய்யப்பட்டனவா என்றசந்தேகத்துடன்) ஆனால் கொடுமை ஒரு புண்ணிய பூமியில் நடந்திருப்பது இந்நாட்டு இந்து மக்களுக்கு மட்டுமல்ல பாரெல்லாம் பரந்து வாழும் எங்களின் சகோதர சகோதரிகளுக்கும் நீதியையும் நியாயத்தையும் என்றும் மதித்து போற்றுகின்ற சகல மதத்தினருக்கும் ஆழ்ந்த கவலையைத் தருகின்றது.

இந்த கொடுமையைச் செய்த பாவிகளுக்கு சட்டப்படி தண்டனை கிடைக்கவும் இப்படியான நிகழ்வுகள் இனிமேல் எங்கும் நிகழாது இருக்கவும் வேண்டுமென்று எம் பெருமானை பிரார்த்திக்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### குளவி கொட்டியதில் பெண்ணொருவர் பலி

(கொழும்பு)

குளவி தாக்குதலுக்கு இலக்காகி பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

கண்டி ரங்கல பிரதேசத்தைச் சேர்ந்த ஏல்லியத்த பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு குளவி தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கணவனும் மனைவியுமே இவ்வாறு குளவி தாக்குதலுக்கு இலக்கானதாகவும் இருவரையும் துன்ஹின்ன கிராம வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லும் போது மனைவி வழியிலேயே இறந் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## பண்ணையில் கடமை புரிவோருக்கு புதிய சம்பள திட்டம் அமுலுக்கு

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் அதன் கீழ் உள்ள பண்ணைகளில் சேவையாற்றும் நாளாந்த சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு மஹிந்த சிந்தனையின் கீழ் புதிய சம்பளம் 2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமுல்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நடத்தப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு , தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் தலைவர் ரஞ்சித் எல்லேகல உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் கீழுள்ள கோழிகள், கரவை இனப் பசுக்கள் உள்ளிட்ட பண்ணைகளின் பல்வேறு துறைகளில் சேவையாற்றும், மக்களுக்கு அதிவிசேட புதிய சம்பள திட்டம் இதுவரை இல்லையென்பதுடன் எங்களது அமைச்சர் ஆறுமுகம் தொணடமானின் அறிவுரையின் பிரகாரம் இவ்வாறு அமுல் படுத்தப்படும் புதிய சம்பள உயர்விற்கு அமைச்சருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையில் அமர்த்தப்பட்ட தற்கால ஊழியர்களுக்கு முதன்முறையாக நிரந்தர நியமனக் கடிதம் வழங்கி அடுத்த நடவடிக்கையாக சம்பள உயர்வை ஏற்படுத்தியுள்ளார். சென்ற வருடம் தேசிய பால் உற்பத்தியில் துரித முன்னேற்றம் காணப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டளவில் மஹிந்த சிந்தனைக்கமைவாக தேசிய திரவபாலின் போசாக்கை பூர்த்தி செய்ய முடியுமென சுட்டிக்காட்டிய அவர் கடந்த வருடத்தில் 2ஆயிரம் கரவை பசுக்கள் கொண்டுவரப்பட்டதெனவும், இவ்வாண்டில் 2ஆயிரம் கரவை இனப் பசுக்கள் கொண்டுவரப்படுமெனவும் கூறினார். (அ-2)

### மனித உரிமை செயற்பாட்டாளர் இலங்கை வருகின்றார்

கனேடிய மனிதவுரிமை செயற்பாட்டாளர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.முன்னணி மனித உரிமை செயற்பாட்டாளரான மொபி மென்டல் என்பவரே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அழைப்பினை ஏற்று மொபி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். கனடாவின், போஸ்டர் போர் டிமொக்ரடிக் என்ற அமைப்பின் தலைவராக மொபி கடமையாற்றி வருகின்றார்.

மொபி மொன்டல் இலங்கையில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார் என்பது குறித்து கண்காணிக்கப்பட உள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.


இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து ஆராய்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

686



## மலைப்பாம்பும் மான்குட்டியும்

..."உன்னை விட்டால் என்னால் பிடிக்க முடியாது? உன் வேகம் என்ன, என் வேகம் என்ன?" என்றது குறட்டி.

"என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீ என்ன சொல்கிறாயே அதற்கு நான் கட்டுப்படுகிறேன்"

"நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன். என்னை சுமந்த படியே செல்ல வேண்டும்" என்று சொன்னது குறட்டி. அது அதற்கு ஒத்துக் கொண்டது. குறட்டியை சுமந்தபடியே சென்றது மான்.

மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்றது. நாவல் பழங்களை சேகரித்துக் கொண்டது.

மலைப்பாம்பு தன் உடலைச் சுற்றியிருக்க உற்சாகத்துடன் நடந்தது.

தனது அம்மாவுக்காக தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத் தது அதற்கு சந்தோஷமாக இருந்தது.

மான் தன் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்தது. தன் இருப்பிடத்தையும் படுத்துக கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

"நாவல் பழங்களைக் கொடுத்துவிட்டு தப்பிக்கலாம் என்று நினைத்தால்.... அப்புறம் நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும்" என்றது குறட்டி.

"நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன். என் வார்த்தையை மீறமாட டேன்" என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடியது மான் குட்டி.

குறட்டி மெல்ல ஊர்ந்து மரங்களின் ஊடே மறைந்து கொண்டது.

அங்கு அதற்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினைந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன.

அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும்.

இப்படித்தான் சென்ற வாரம் ஒரு மலைப பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மாலைப் பாம்பு அங்கேயே உயிரைவிட்டது.

பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக் கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது.

"கையில் கிடைத்ததை விட்டு விட்டோமோ?" என்று கூட ஆதங்கமாக இருநதது.

எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நலலது. குறட்டி பெரிய தனது உடலை வளைத்து நெளிந்தபடி மறைவிடம் நோக்கி நகர ஏதோ அரவம் கேட்டது.

அதே மான்குட்டி தனியாக வந்தது.

"என் கடமை முடிந்தது... எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன்... உனக்கு எனது நன்றி" என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான் குட்டி.

குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது.

"என்னைப் பற்றியா சொன்னாய்" என்றது குறட்டி

"இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன்."என்றது மான்

"உன்னை கொன்று தின்னப் போகும் நான் எப்படி உனக்கு உதவியவன் ஆவேன்?" என்று கேட்டது குறட்டி

"நீ சொன்னது சரிதான்.. ஆனால் நீ உதவாவிட்டால் என் அம்மாவைக் காபபாற்ற முடியாது போயிருக்கும். பெற்றோருக்காக தனது உயிரைத் தருவதைவிட பெருமை தரக்கூடிய விஷயம் உலகத்தில் வேறு என்ன இருக்க முடியும்?" என்றது மான்குட்டி.

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது.

"தாய்க்காக தனது உயிரை தரத்துணிந்த உன்னை வணங்கினாலே...எனக்குப்



பெருமை" என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது.

மான்குட்டி குறட்டியை ஆச்சரியமாகப் பார்த்துது.

மரக்கிளைகளில் தவழ அதன் உடம்பின் கரும்புள்ளிகள் வைரமாக மின்னின.

**(தொடரும்)**



## 12 01.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

475- பசிலிஸ்கஸ், பைசண்டைன் பேரரசனாக முடி சூடினான்.

1528- சுவீடனின் மன்னனாக முதலாம் குஸ்தாவ் முடி சூடினான்.

1539- புனித ரோம பேரரசு மன்னன் ஐந்தாம் சார்ல்ஸ், மற்றும் பிரஞ்சு மன்னன் முதலாம் பிரான்ஸ் ஆகியோருக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

1853- தாய்பிங் இராணுவம் சீனவாவின் வூச்சாங் நகரைப் பிடித்தது.

1875- சீனாவின் மன்னனாக குவாங்-சூ முடி சூடினான்.

1908- முதற்தடவையாக தூர இடத்துக்கான வானொலி செய்தி ஈஃபெல் கோபுரத்தில் இருந்து அனுப்பப்பட்டது.

1915- அமெரிக்கக் காங்கிரஸ் பெண்களுக்கு வாக்குரிமை அளிப்தற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

1918- பின்லாந்தில் உள்ள யூதர்கள் முழுக் குடியுரிமையைப் பெற்றார்கள்.

1940- இரண்டாம் உலகப் போர்: பின்லாந்தின் பல நகரங்களின் மீது ரஷ்யா குண்டுகளை வீசியது.

1945- இரண்டாம் உலகப்போர்: சோவியத் ஒன்றியம், நாசிகளுக்கு எதிரான பெரும் போரை கிழக்கு ஐரோப்பாவில் ஆரம்பித்தது.

1964- சான்சிபாரின் புரட்சிவாதிகள், புரட்சியை முன்னெடுத்து சான்சிபாரைக் குடியரசாக அறிவித்தனர்.

1967- நடிகர் திலகம் எம்.ஜி.ஆர், நடிகர் எம்.ஆர் ராதாவின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

1976- பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஐ.நா. பாது காப்பு அவையில் வாக்குரிமையில்லாமல், விவாதங்களில் கலந்துகொள்வதற்கு ஐ.நா. பாதுகாப்பு அவை, 11-1 என்ற வித்தியாசத்தில் அனுமதி அளித்தது.

1992- மாலியில் அரசியல் கட்சிகள் அமைப்பதற்கு ஏதுவாக பொதுவாக்கெடுப்பு மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப் பட்டது.

2004- உலகின் மிகப்பெரும் பயணிகள் கப்பலான ஆர்.எம்.எஸ்.குயீன் மேரி-2 தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது.

2005- புளோரிடாவின் கென்னடி ஏவுதளத்திலிருந்து போயிங் டெல்டா-2 என்ற விண்கலத்தை-133 மில்லியன் மைல்களுக்கப்பால் -பரிதியைச் சுற்றி பூமியை நெருங்கி வரும் டெம்பெல் 1 என்ற வால்மீனைக் குறிவைத்து நாசா ஏவியது.

2006- சவுதிஅரேபியாவில் மினா நகரில் சாத்தான் மீது கல்லெறியும் நிகழ்ச்சியின்போது,362 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புகள்.**

1863- சுவாமி விவேகானந்தர் (இ.1902)

1972- பிரியங்கா காந்தி, இந்திய அரசியல் வாதி

**இறப்புகள்**

1997- சார்ல்ஸ்ஹக்கின்ஸ்,நோபல்பரிசுபெற்ற கனேடிய புற்றுநோய் ஆராய்ச்சியாளர் (பி.1901)

2000- வி.ஆர்.நெடுஞ்செழியன், தமிழக அரசியல் தலைவர்.

### சுவாமி விவேகானந்தரின் பொன்மொழி வாசகங்கள்



கடவுள் இருந்தால் அவனை நாம் காண வேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.

உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாயத்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைத்தனம்.

உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சு எண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.

சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்!

இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்.

இளைஞர்களே உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.

வலிமையே மகிழ்ச்சிகரமான நிரந்தரமான வளமான அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள சரியான வழியை தெரிவு செய்யுங்கள்

## கலாநிதி தயான் அறிவுரை



(கொழும்பு)

**அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக சுயாதீன விசாரணை நடத்த வேண்டும் என்ற யோசனையை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக முன்னாள் இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமை ஆணைக் குழு வின் கூட்டத் தொடரில் இந்த யோசனையை நிறைவேற்ற இந்த நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் வலைத்தளத்தில் போர்க் குற்றங்கள் தொடர்பான அமெரிக்க தூதுவர் ஸ்டீபன் ஜே. ரப்பின் இலங்கை விஜயம் தொடர்பான படங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

புனித அந்தோனியார் மைதானத்திற்கு விஜயம் செய்ததாகவும் அந்த இடம் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஷெல் வீச்சு தாக்குதலில் கொலை செய்யப்பட்ட இடம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அமெரிக்க தூதரகம் இதனை முழு உலகத்திற்கும் கூறிவிட்டது. இதன் மூலம் சர்வதேச விசாரணை நடத்த போகும் முயற்சியை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

சர்வதேச விசாரணை நடத்தி இலங்கை இராணுவமும் இலங்கை அரசும் மேற்கொண்ட நியாயமான போரை தலைகீழாக புரட்டி போட்டு, இலங்கை மீது விமர்சனங்களை முன்வைத்து குற்றவாளியாக்கவே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது மிகவும் பயங்கரமான ஆபத்து.

இதனை முறியடிக்க இலங்கை அரசாங்கம் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் சுயாதீனமான விசாரணைகளை நடத்த வேண்டும்.

இந்த விசாரணை நடத்த நீதிபதி சீ.கிறிஸ்டி வீரமன் நியமிக்கப்பட வேண்டும் என்று நான் யோசனை முன்வைக்கின்றேன். அல்லது டெஸ்மன் டி சில்வா என்ற மகாராணி சட்டத்தரணியை நியமித்து தேசிய ரீதியான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன்வடக்கு மாகாண சபையுடன் அரசியல் ரீதியான இணக்கத்தை ஏற்படுத்தி அந்த உண்மையை உலகிற்கு காட்ட வேண்டும். முடிந்தளவான அரசியல் இணக்கப்பாடுகளை பகிரங்கமாக ஆரம்பிக்க வேண்டும்.

மூன்றாவது நடவடிக்கையாக அரசாங்கத்தில் இருக்கும் வெளிநாட்டு கொள்கைகளை நன்கு அறிந்து அதில் நிபுணத்தும் பெற்ற சிலரை கொண்ட அமைச்சரவை குழு ஜனாதிபதி தலைமையில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கலாநிதி சரத் அமுனுகம, டியூ.குணசேகர, ரஜீவ விஜேசிங்க, வசந்த சேனாநாயக்க, மிலிந்த மொரகொட ஆகியோர் அந்த குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டும்.

நடந்து வரும் இந்த பனிப்போரை வெற்றி தோல்வியின்றி நிறுத்த இந்த அமைச்சரவை குழு ஜனாதிபதி உடனடியாக நியமிக்க வேண்டும். அத்துடன் இலங்கையின் நட்பு நாடுகளான ரஷ்யா, சீனாவுடன் இராஜதந்திர மட்டத்திலான தொடர்புகளை மேலும்வலுப்படுத்த வேண்டும்.

ரஷ்யாவும் சீனாவும் இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகள். எனக்கு தெரியவந்த வகையில் இலங்கை அரசாங்கம் இந்த நாடுகளிடம் உதவிகளை இதுவரை கோரவில்லை. இந்த நாடுகளை பயன்படுத்தி வாக்குகளை சேகரிக்க வேண்டும்.

வெளிவிவகார அமைச்சு ஜெனிவாவில் வெற்றி பெற்றதையும் 2012 ஆம் ஆண்டு 2013 ஆம் ஆண்டு தோல்விய டைந்ததையும் இதுவரை கற்றறிந்து கொள்ளவில்லை. எதற்காக வெற்றி பெற்றோம், ஏன் தோல்வியடைந்தோம் என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அரசியல்வாதிகளின் மோசடி பணத்தை கைப்பற்றுவோம்

## மங்கள எம்.பி. சூளுரை



இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மோசடிகள் மூலம் பெற்றுக் கொண்ட பணத்தை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை அடுத்து ஆட்சிக்கு வரும் ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் மேற்கொள்ளும் என அந்த கட்சியின் அரசியல்துறை செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசியல்வாதிகள் முறைகேடாக சம்பாதித்துள்ள பணத்தை கைப்பற்ற உலக வங்கியின் உதவியை பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கொள்ளையிடும் பணங்கள் வெளிநாடுகளில் உள்ள நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் பண மோசடியில் ஈடுபடும் அரசியல்வாதிகளின் பணம் வெளிநாடுகளில் பல வங்கிகளில் வைப்பில் இருப்பதாக இந்தியாவை சேர்ந்த சர்மா என்ற ஊடகவியலாளர் வெளியிட்டுள்ளார்.

மோசடி செய்யப்பட்ட இந்த பணத்தை கைப்பற்றினால் நாட்டை முன்னேற்ற முடியும்.

எகிப்து நாட்டின் மன்னர்கள் கொள்ளையிட்ட பணம் மீண்டும் கைப்பற்றப்பட்டு திறைசேரியில் சேர்க்கப்பட்டது. அப்படியான முறையை ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் முன்னெடுக்கும் என்றார். (அ-2)



பிரதேச அபிவிருத்தி வங்கி சுன்னாகம் கிளையில் புதுவருட நிகழ்வுகள் முகாமையாளர் க.இலட்சுமணசர்மா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேச வங்கியின் மாவட்ட முகாமையாளர் எஸ்.கீர்த்திசீலன் சிறுவர் சேமிப்புக் கணக்கில் 50 ஆயிரம் ரூபாவிற்கு மேல் வைப்பு செய்தமைக்கான பரிசினை வாடிக்கையாளரின் பிள்ளைக்கு வழங்குவதனை படத்தில் காணலாம்.

(படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# பரஸ்பர மீனவர் பரிமாற்றம்; இந்திய அரசு ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையுடன் பரஸ்பர இணக்கப்பாட்டின் கீழ், இரண்டு நாடுகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை பறிமாற்றிக் கொள்வது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இது தொடர்பில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் தெரியப்படுத்தி இருப்பதாக அதன் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 275இற்கும் அதிகமான மீனவர்கள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் தமிழகம், ஆந்திரபிரதேசம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களில் இலங்கையைச் சேர்ந்த 223 மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களை புரிந்துணர்வின் அடிப்படையில் பறிமாற்றிக் கொள்வது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சுக்களுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருப்பதாக டீ.ஆர்.பாலு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கழிவு உலோகங்களை பெற்றுக் கொள்ளலாம்

(கொழும்பு)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் உலோக/வார்ப்பு தொழிலில் ஈடுபடுகின்ற தொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கும் செயற்பாடாக நியாய விலையில் மூலப் பொருட்களை வழங்க பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே கழிவு உலோகங்கள் பெற்றுக் கொள்ள விரும்பும் இத்தொழில் முயற்சியில் ஈடுபடுகின்ற முயற்சியாளர்கள், கைத்தொழில் அபிவிருத்தி சபை,தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை [illegible] என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (அ)

# பந்துல ஜயசேகர-கெலம் மக்ரே டுவிட்டரில் கடும் மோதல்

அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை கொன்சோல் அதிகாரி பந்துல ஜயசேகரவிற்கும் சனல் 4 ஊடகத்தின் பணிப்பாளர் கெலம் மக்ரேவிற்கும் இடையில் டுவிட்டரில் கருத்துச் சமர் இடம்பெற்றுள்ளது. இருவரும் ஒருவரை மாறி ஒருவர் கடுமையாக திட்டிக் கொண்டுள்ளனர்.

பந்துல ஜயசேகர அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸின் கொன்சோல் அதிகாரியாக கடமையாற்றி வருகின்றார்.

பந்துல ஜயசேகர முட்டாள்தனமான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார் என கெலம் மக்ரே குற்றம் சுமத்தியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடெல் பாலசிங்கத்திற்காக பிரசாரம் செய்வதாக பந்துல குற்றம் சுமத்தியுள்ளார்.

வாழ்க்கையில் ஒரு தடவை கூட அடெல் பாலசிங்கத்தை சந்தித்தது கிடையாது. பந்துல ஜயசேகர தயவு செய்து வளர்ச்சி அடையுங்கள் என கெலம் மக்ரே டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான பிரசாரப் பொறுப்பாளர் என கெலம் மக்ரேவை பந்துல சாடியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அமைச்சரின் டில்லி வருகையை மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது

## பா.ம.க.நிறுவனர் டாக்டர் ராமதாஸ்



(சென்னை) ஈழத்தமிழர்களுக்கு நீதிகிடைப்பதைத்தடுக்கும் நோக்குடன், மற்றைய நாடுகளின் ஆதரவை திரட்டுவதற்காக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் டில்லிக்கு வருகை தரவுள்ளார். இவரது வருகையை மத்திய அரசு தடைசெய்யவேண்டும். அத்துடன் இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை ஐ.நா.மனிதவுரிமை ஆணையகத்தில் இந்தியாவே கொண்டு வரவேண்டும் என பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் ஒன்றரை இலட்சம் அப்பாவி தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை அரசை தண்டிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்து கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நேரில் விசாரணை நடத்திய ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவரது இறுதி அறிக்கையை எதிர் வரும மார்ச் மாதம் 26 ஆம் திகதி ஐ.நா. மனிதவுரிமை ஆணைய கூட்டத்தல் தாக்கல் செய்வார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மனித உரிமை ஆணையத்தின் 25ஆவது கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி தொடங்கி 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டு மற்றும் அங்கு காணப்படும் தற்போதைய சூழல்கள் குறித்து நவநீதம்பிள்ளை தாக்கல் செய்யும் அறிக்கை குறித்து 2 நாட்கள் விவாதம் நடத்தப்படவிருக்கிறது.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்து நேர்மையான விசாரணை நடத்தும்படி அந்நாட்டுக்கு மனித உரிமை ஆணையம் 2 முறை ஆணையிட்ட போதிலும் இன்றுவரை எந்த நடவடிக்கையையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை.

எனவே, ஏற்கனவே எச்சரித்தவாறு இலங்கை மீது சுதந்திரமான சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்துவது குறித்து இந்த விவாதத்தின் முடிவில் மனித உரிமை ஆணையம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னொரு புறம் இலங்கை போர்க்குற்றங்கள் பற்றி விசாரணை நடத்தக்கோரி ஏற்கனவே 2 முறை தீர்மானம் கொண்டு வந்த அமெரிக்கா, இந்த முறை இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை கோரி தீர்மானம் கொண்டு வரப்போவதாக தெரிகிறது.

இத்தீர்மானம் வெற்றி பெறக் கூடும் என்பதால், இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஆணையிடப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

இதனால் கலக்கமடைந்துள்ள இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்தை முறியடிப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

அதன் ஒருகட்டமாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் எதிர்வரும் 28 ஆம் திகதி இந்தியா வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், எதிர்க்கட்சித்தலைவர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரை சந்திக்கும் அவர், ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்வார் என கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் தூதரகங்கள் இலங்கையில் இல்லாத நிலையில், டில்லியில் உள்ள அந்த நாடுகளின் தூதர்களையும் சந்தித்து ஆதரவு திரட்ட பீரிஸ் திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை தடுக்கும் நோக்குடன், மற்ற நாடுகளின் ஆதரவை திரட்டுவதற்காக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் டெல்லி வருவதை அனுமதிக்கக் கூடாது.

எனவே, அமைச்சர் பீரிஸ் இந்தியா வருவதற்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும்.

அதுமட்டு மின்றி, இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இந்தியாவே கொண்டு வருவதுடன், அதை வெற்றி பெறச் செய்வதற்கான முயற்சி களையும் இப்போதே தொடங்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். (2)

பாரதச் செய்தி

## ஆந்திரா சட்டசபையில் கூச்சல், குழப்பம் சபை ஒத்திவைப்பு


ஆந்திர சட்டசபையில் தெலுங்கானா மசோதா மீதான விவாதம் நடைபெற்றுவருகிறது.

7ஆவது நாளான நேற்றுமுன்தினம் சபையில் அமளி ஏற்பட்டது. காலை சபை கூடியதும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் தெலுங்கானாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷம எழுப்பினார்கள். உறுப்பினர்களின் தொடர் அமளியால் விவாதம் தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட கூச்சல், குழப்பத்தால் சபை 30 நிமிடம் ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் சபை கூடியதும் மீண்டும் அவர்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். மத்திய அரசின் பிடிவாதத்தை கண்டித்து ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 20 பேர் வெளிநடப்பு செய்தனர்.

இதையடுத்து சீமாந்திரா பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் மற்றும் தெலுங்கு தேசம் எம்.எல்.ஏக்கள் சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டு கோஷம் எழுப்பினார்கள்.

இதனால் ஆத்திரம் அடைந்த டி.ஆர்.எஸ். உறுப்பினர்கள் சுத்யா சாகர் ராவ் அரசு கொறடா துரோணம் ராஜுவை தாக்க முற்பட்டார். இதனை தடுக்க முயன்ற காங்கிரஸ் மூத்த உறுப்பினர்கள் கடே வெங்கடரெட்டியை பிடித்து தள்ளினார். இதில் அவரது சட்டை கிழிந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து சபையை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை சபாநாயகர் ஒத்தி வைத்தார். (2)



பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் சுவாமி கோவிலில் நேற்று அதிகாலை சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. இதன் போது சொர்க்க வாசலை கடந்து பக்தர்களுக்கு சுவாமி அருள் பாலித்தார்.

# மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ரங்கசாமி தெரிவிப்பு

(புதுச்சேரி)

இலங்கை கடற்படையினரால் தமிழக மற்றும் புதுவை மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுவை சட்டசபையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நிவாரணம் வழங்கும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் முதலமைச்சர் ரங்கசாமி கலந்து கொண்டு மீனவர்களுக்கான இலவச துணிகளை வழங்கினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

தமிழகம் மற்றும் புதுவை மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. இதில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு ஏற்பாடு செய்து வருகிறது. இந்த பேச்சுவார்த்தையில் புதுவை மீனவர்களையும் சேர்க்க கோரி பிரதமருக்கு ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளேன் என அவர் கூறினார். (2)



# நரேந்திர மோடி பிரதமரானால் நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லும்

## கிரண்பேடி உறுதி



நரேந்திர மோடி பிரதமரானால் நாட்டில் வளர்ச்சி ஏற்படும் என்று சமூக சேவகர் அன்னா ஹசாரேவின் நெருங்கிய ஆதரவாளர் கிரண்பேடி உறுதியாக கூறியுள்ளார்.

இது பற்றி டுவிட்டரில் அவர் எழுதியிருப்பதாவது, என்னை பொருத்த வரை நாடுதான் முதலில். அதுவும் பாரததேசம்தான் முக்கியம். நாட்டுக்கு இப்போது நிலையான ஊழலற்ற சிறந்த நிர்வாகம்தான் தேவை. அதை நரேந்திர மோடியால்தான் வழங்க முடியும். அதனால் நான் இந்த முறை நரேந்திர மோடிக்குததான் வாக்களிக்கப்போகிறேன். மோடி பிரதமரானால் நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லும்.

நாட்டில் நிலையான திறமையான அரசை, அனுபவமிக்கவர்களால்தான் வழங்க முடியும். ஊழலின் கொடிய பிடியிலிருந்து நாடு விடுதலை பெற விரும்புபவர்கள், காங்கிரசுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

டில்லி அரசு, ஊழல் பற்றி புகார் தெரிவிக்க புது தொலைபேசி வசதியை ஏற்படுத்தியிருப்பது பாராட்டதக்கது. அதே நேரத்தில் முன்னாள் முதல்வர் ஷீலா தீட்சித் மீது குற்றம் சாட்டியுள்ள லோக் ஆயுக்தாவின் அறிக்கைகள் மீது பேரவையில் விவாதம் நடத்தப்பட வேண்டும இவ்வாறு அவர் கூறியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுருதிஹாசன் திடீரென மருத்துவமனையில் அனுமதி

கமல்ஹாசனின் மகளும் நடிகையுமான ஸ்ருதி ஹாசன், தெலுங்கில் ரேஸ் குர்ரம் என்ற படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தில் நடிப்பதற்காகவும் எதிர்வரும் 12ஆம் திகதி ரிலீசாகவிருக்கும் "யவடு" படத்தின் புரமோஷன் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும் ஸ்ருதி ஹாசன் சமீபத்தில் ஐதராபாத் சென்றிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் யவடு திரைப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி நடந்தது. இதில் ஸ்ருதி ஹாசன் கலந்துகொண்டார். அப்போது அவருக்கு திடீரென வயிற்று வலி ஏற்பட்டது. அதை சகித்துக்கொண்டு அவர் நிகழ்ச்சியில் பங்கேற்றதாக தெரிகிறது. வயிற்று வலி அதிகமானதால் நிகழ்ச்சி முடிந்ததும் உடனே ஜூப்ளி ஹில்ஸ் பகுதியில் உள்ள மருத்துவமனைக்கு சென்றார்.

அங்கு அவருக்கு ஸ்கேன் எடுத்து பார்த்ததில் எந்த பிரச்சினையும் இல்லை என்று மருத்துவர்கள் கூறினர். தொடர்ந்து ஷூட்டிங்கில் பங்கேற்று நடித்ததால் அவர் சோர்வாக இருக்கிறார் என்பதால் சில நாட்கள் அவரை ஓய்வெடுக்கும் படி மருத்துவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். சில நாட்கள் ஓய்வெடுத்த பிறகு ஸ்ருதி வழக்கம்போல படப்பிடிப்பில் கலந்துகொள்ளலாம் என்றும் டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள்.

இது பற்றி ஸ்ருதிக்கு நெருங்கியவர்கள் கூறும்போது, தொடர்ந்து ஷூட்டிங்கில் பங்கேற்றதால் ஸ்ருதி சோர்வாக இருந்து வந்தார். அவருக்கு ஃபுட் பாய்சன் பிரச்சினை ஏற்பட்டிருக்கும் என தெரிகிறது என்றனர்.

# விஸ்வரூபம் 2 இல் அதிக முத்தக்காட்சி



விஸ்வரூபம் 2 ஆம் பாகத்தில் கமல்ஹாசன், ஆண்ட்ரியா முத்தக்காட்சி தான் இப்போதைக்கு விஸ்வரூபம் குறித்த லேட்டஸ்ட் நியூஸ்.

விஸ்வரூபம் முதல் பாகத்தில் ஆண்ட்ரியாவுக்கு காட்சிகள் பெரிய அளவில் இல்லை.

ஆனால் 2 ஆம் பாகத்தில் அவருக்கு நிறைய காட்சிகள் வருகிறதாம்.

அதிலும் கமலுடன் ஒரு லிப் லாக்கும் இருக்கிறதாம். இந்த முத்தக் காட்சியை வழக்கம் போல கலைநயத்துடன் படம் பிடித்துள்ளார்களாம். காட்சியும் நன்றாக வந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் படத்தில் அஸ்மிதா சுப்பிரமணியம் என்ற ரோலில் வருகிறார் ஆண்ட்ரியா.

அதேசமயம், 2 ஆம் பாகத்தில் விருமாண்டி நாயகி அபிராமியையும் களத்தில் இறக்கி விட்டுள்ளனர்.

# வெளிநாட்டில் சூடு பிடிக்கும் ஜில்லா



பொங்கல் பண்டிகையை ஒட்டி "ஜில்லா" படம் உலகம் முழுவதும் வெளியாகின்றது.

விஜய் மற்றும் மோகன்லால் நடித்த "ஜில்லா" படம் இதுவரை இல்லாத அளவிற்கு வெளிநாடுகளில் உள்ள திரையரங்குகளில் திரையிடப்பட இருக்கிறது.

பொதுவாக விஜய் நடித்த படத்திற்கு மலேசியா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கும்.

ஆனால், "ஜில்லா" படத்திற்கு விநியோகிஸ்தர்களே எதிர்பார்க்காத வகையில் மிகப் பெரிய அளவில் வெளிநாடுகளில் வரவேற்பு கிடைத்துள்ளதாம்.

வெளிநாடுகளில் மட்டும் மொத்தம் 213 திரையரங்குகளில் ரிலீஸ் ஆக ஒப்பந்தம் ஆகியுள்ளதாம் "ஜில்லா". இது 11 நாடுகளில் மட்டும்.

மலேசியாவில் இன்னும் திரையரங்குகளில் எண்ணிக்கை முடிவாகவில்லையாம்.

ஜில்லா வெளியாகும் அதே நாளில் வெளியாகும் அஜித்தின் "வீரம்" படம் இதுவரை வெளிநாட்டில் 153 திரையரங் குகளில் ஒப்பந்தம் ஆகியுள்ளதாம்.

# எவ்வளவு கவர்ச்சியும் காட்ட தயாராம் - பிரியங்கா



படங்களில் என்னால் யாரையும் ரொமான்ஸ செய்ய முடியும் அத்தோடு எதற்கும் அஞ்சாமல் எவ்வளவு கவர்ச்சி காட்டவும் தயார் என்று கூறியுள்ளார் ப்ரியங்கா சோப்ரா.

பாலிவுட்டில் முன்னணி நாயகியாக வலம வரும் ப்ரியங்கா சோப்ரா மும்பையில் நடை பெறும் 59ஆவது பிலிம்பேர் விருது வழங்கும் விழாவினை, நடிகர் ரண்பிர் கபூரும் இணைந்து தொகுத்து வழங்குகிறார்.

ப்ரியங்கா முதல் முறையாக விருது விழாவை தொகுத்து வழங்குகிறார்.

இந்நிலையில் ரீல் வாழ்க்கையில் காதல்இ கொமடியில் கலக்கும் ஷாருக்கும், பிரியங்காவும் ஜோடியாக விழாவை தொகுத்து வழங்கினால் நன்றாக இருக்கும் என்று பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த பிரியங்கா, அது என்ன ஷாருக், என்னால் யாரையும் படத்தில ரொமான்ஸ் செய்ய முடியும். அது என் தொழில் என்று கூறியுள்ளார்.

# சம்பளத்தை உயர்த்திய பரோட்டா சூரி



"வருத்தப்படாத வாலிபர் சங்கம்" படத்தில் இவர் செய்த காமெடி ரசிகர்களின் ஆதரவைப் பெற்றது.

குறைந்த சம்பளம், பந்தா இல்லாத நடிப்பு என்ற பிளஸ் பாயின்டால் சந்தானத்தின் கால்ஷீட் கிடைக்காதவர்கள் சூரியை மொய்க்கத் தொடங்கினர்.

அதனால்தான் சிம்பு, விஜய் படங்களில் சூரி பிஸியாக இருக்கிறார். தற்போது சூரியின கால்ஷீட் டைரி நிரம்பி வழிகிறது. இதைப் பயன்படுத்தி தன் சம்பளத்தையும், அதிரடியாக உயர்த்தி விட்டாராம் சூரி.

ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த சூரி இப்போது மூன்று இலட்சம் சம்பளம் கேட்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெத்தா நிறுவனத்தின் கிளை மாங்குளத்தில்

(கிளிநொச்சி)

வடமாகாணத்திலுள்ள மாற்று வலுவுள்ளவர்களுக்கு சேவை யாற்றுவதற்கு மெத்தா நிறுவனம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் மாங்கு ளம் ஏ-9 வீதியில் தனது கிளையை ஆரம்பிக்கவுள்ளது.

இந் நிறுவனம் கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை கிழக்கு, தெற்கு மாகாணங்களிலுள்ள மாற்றுவலு வுடையோருக்கு சேவையாற்றுவதற் காக மாகோ பிரதேசத்தில் புதிய கிளையை ஆரம்பித்துள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் இயங்கும் இந்நிறுவனத்தின் காரி யாலயத்தினூடாக மன்னார், வவு னியா போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த மாற்றுவலுவுடையோர் சிகிச்சை பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், துணுக்காய், பூநகரி போன்ற பிரதே சங்களிலுள்ள மாற்றுவலுவுடை யோர் பயனடைவதற்காக ஏப்ரல் மாத மளவில் இலங்கை அமல உற்பவ சபை (OMI) நடத்தும் லெபறா ஸ்தாபனத்தின் உதவியுடன் மாங்கு ளம் ஏ-9 வீதியில் தனது கிளையை திறக்கவுள்ளது.

மெத்தா நிறுவனம் செயற்கை அவயவங்கள் பொருத்துவதற்கான 80 விதமான உப பொருட்களை ஐக் கிய இராச்சியத்திலுள்ள நலன் விரும்பிகள் ஊடாக பெற்றுக்கொள் கின்றது.

அத்துடன் செயற்கை பாதங் களை தமது பிரதான வேலைத்தள மான மாகோ நிலையத்தில் உற் பத்தி செய்து வருகின்றது.

கடந்த 4 வருடங்களாக மாற்று வலுவுடையவர்களுக்கான சேவையை நடத்த இலங்கை சுகா தார திணைக்களம், மன்னார் பிராந் திய சுகாதார பணிப்பாளர், திருக் கேதீஸ்வரம் சிவன் அருள் இல்ல பணிப்பாளர், லெபறா ஸ்தாபன இலங்கை பணிப்பாளர், வட மாகாண அரசாங்க அதிபர்கள் போன்றோர் உதவியதாக மெத்தா நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-9)

# மறு அறிவித்தல் வரும்வரை வலைகளை பயன்படுத்த வேண்டாம்



(முல்லைத்தீவு)

கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் சாலை முகத்துவாரம் வரையான சிறு கடல் நீரேரிகளில் தடைசெய்யப்பட்டுள்ள வலைகளை எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை முதல் மறு அறிவித்தல் வரும்வரை பயன்படுத்த வேண்டா மென முல்லை. மாவட்ட கடற்றொ ழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.அருள் ஜெனி பேட் அறிவித்துள்ளார்.

சிறுகடல் நீரேரியில் பயன்படுத் தப்படுகின்ற தங்கூசி வலை, கூட்டுவலை, படுப்பு வலை, இழுப்பு வலை ஆகிய வலைகளை பயன்ப டுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் கொக்கிளாய் ஆறு, நாயாறு, நந்திக்கடல், சாலை போன்ற கடநீரேரிகளில் மேற்படி தடை செய் யப்பட்ட வலைகளை சில மீனவர் கள் சட்டவிரோதமான முறையில் பாவித்து வருவதனால் ஏனைய தொழிலாளர்கள் அன்றாடம் பாதிக் கப்பட்டு வருகின்றனர்.

இந் நிலையிலே எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து தடைசெய் யப்பட்ட வலைகளைப் பயன்ப டுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மீது நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்க மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முடிவெடுத் துள்ளது. (அ-9-267)

# அறிவோர் ஒன்று கூடல்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங் கத்தின் அறிவோர் ஒன்று கூடல் கரைச்சி பிரதேச அவை முற்றத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை பி.ப. 5 மணிக்கு நடை பெறவுள்ளது.

இதில் இலங்கை வைப்பக மேலாளர் கு.சிவஞானசுந்தரம் தமிழ்வளர்ச்சி எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவின் நிறைவில் கலந்துரையாடல் நடைபெறவுள்ள தாக தமிழ்ச் சங்கம் அறிவித்துள் ளது. (அ)

# நடமாடும் சேவையில் பலர் பயன் பெற்றனர்



(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத் தில் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத் தின் ஆதரவில் கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை பதிவாளர் நாயகத் தின் ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை நடை பெற்றது.

இந் நிகழ்வில் பிறப்பு ,இறப்பு ,விவா கப் பதிவு சான்றிதழ்கள், காலங் கடந்த பிறப்பு,இறப்பு, விவாகப் பதிவு சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்பட்டு, இச் சான்றிதழ்கள் பெறு வதற்கான கட்டணங்கள் யாவும் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

அத்தோடு பொதுமக்களுக்கு தேவையான பொலிஸ் அறிக்கைக ளும் உடனடியாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு நன்மை பெற்றனர்.

ஆவணங்களுக்கான கட்டணங் கள், முத்திரைச் செலவு யாவற்றை யும் கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் வழங்கியது. (அ-9-254)

# மது மற்றும் புகைத்தலற்ற பிரதேசமாக வவு.வடக்கு

## மாணவர்கள் உறுதிமொழி

(பூந்தோட்டம்)

வவுனியா வடக்கு பிரதேசத்தை மது மற்றும் புகைத்தல் அற்ற பிரதேசமாக மாற்ற வேண்டும் என பிரதேச செயலக மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

மீள்குடியேற்றப்பட்ட பிரதேசத் தில் மது மற்றும் புகைத்தலை நிறுத் துவதன் ஊடாக பொருளாதாரத்தில் அபிவிருத்தியை காணமுடியும் என்ற நோக்கோடு இடம்பெற்ற நிகழ்வில் முதற்கட்டமாக வவுனியா வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் கருத்தரங்கு இடம்பெற்றி ருந்தது.

இதனையடுத்து பிரதேச செயல கத்தில் இருந்து நெடுங்கேணி மகாவித்தியாலயம் வரை விழிப்பு ணர்வு ஊர்வலம் நடைபெற்று நெடுங்கேணி மகாவித்தியாலயத் தின் முன்பாக ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் பிரதேசத்தில் மது மற்றும் புகைத்தலை இல்லா தொழிக்க பாடுபடுவோம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

சுகாதார திணைக்களத்தின் சுகாதார கல்வி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலா ளர் க.பரந்தாமன், உதவி பிரதேச செயலாளர் வி.ஆயகுலன், வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுரேந்திரன், மேற்பார்வை பொது சுகாதார வைத்திய அதிகாரி நக்கீரன், சுகாதார கல்வி பிரிவு அதிகாரி கே.கேதீஸ் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாண வர்கள் ,பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-9-266)




# செம்மலை கிராமத்தின் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் குடிநீர் தட்டுப்பாடு

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட செம்மலை கிரா மத்திலுள்ள குறிப்பிட்ட பகுதியில் நிலவுகின்ற குடிநீர்ப்பிரச்சினை யால் அன்றாடம் அல்லற்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ள னர்.

செம்மலை கிராம மக்கள் 2010 ஆம் ஆண்டு ஜுலை மாதம்2 ஆம் திகதி மீள் குடியேற்றப்பட்டுள்ள நிலையில், இங்கு சுமார் 350 இற் கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின் றன.

முல்லைத்தீவு கொக்கிளாய் ஊடாக செம்மலைக் கிராமத்திற்கு செல்லும் B- 297 வீதியை அண்டி யுள்ள 30 குடும்பங்கள் வசிக்கும் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நிலவு கின்றது.

குறித்த பகுதியின் நீர் உவராகக் காணப்படுவதனால் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக இம் மக் கள் நீண்டதூரம் செல்ல வேண்டிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபை யினரால் குடிநீர்த்தட்டப்பாடு நிலவு கின்ற கொக்கிளாய் முகத்துவாரத் திலுள்ள 325 குடும்பங்களுக்கு அன்றாடம் நீர்த்தாங்கிகள் ஊடாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப் பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ள இக் கிராம மக்கள் தமது பிரதேசத்தி லுள்ள 30 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகத்தை பிரதேச சபையினர் மேற்கொள்ள வேண்டும் என வலியு றுத்துகின்றனர்.

குடிநீர்ப் பிரச்சினையை எதிர் நோக்கி வருகின்ற இக் கிராமத்தில் 4 குடிநீர்தாங்கிகளை அமைத்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ள கரைதுறை பற்றுபிரதேசசபையினர் ஆவன செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

# பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாண வர் சங்க விசேட பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் எம். எஸ்.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் ஜயாத் துரை மண்டபத்தில் இடம்பெற இருந்த விசேட பொதுக் கூட்டமே பிற் போடப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் பொதுக் கூட்டம் தொடர் பான தகவல்கள் பின்னர் அறிவிக் கப்படும் எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (அ-9-266)

# 35 ஆலயங்களின் புனரமைப்பிற்கு எழுபது இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த யுத்தத்தினால் சேதமடைந்த இந்து ஆலயங்களைப் புனர மைப்பு செய்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இதன்படி முல்லை. மாவட்டத்தி லுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செய லர் பிரிவில் ஒரு கோயிலும் துணுக் காய் பிரதேச செயலர் பிரிவில் 4 கோயில்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 11 கோயில் களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் 19 கோயில் களுமாக மொத்தம் 35 இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்காக தலா 2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட இந்து சமய கலாசார உத்தி யோகத்தர் சி.மோகனராசா அறிவித் துள்ளார்.

இந்து ஆலயங்களின் புனர மைப்பின் அவசியம் பற்றி முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேத நாயகனின் வேண்டுகோளுக்க மையவே மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி குறித்த இந்து ஆலயங் களின் நிர்வாகிகளிடம் கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி கைய ளிக்கப்பட்டுள்ளது. (அ-9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## எனக்கு திருமணம் ஆகப்போ கிறது. ஏதாவது அறிவுரை கூற முடியுமா?

அன்பின் வியாசரே!

எனக்கு திருமணம் ஆகப்போ கிறது. ஏதாவது அறிவுரை கூற முடியுமா?

சதீஸ், சாவகச்சேரி

ஒரு சிறிய கதை.

நண்பனின் திருமணத்திற்கு ஒருவர் ஒரு நாய்க்குட்டியை பரிசளித்தார். சிறிது காலம் கழித்து அவரை சந்திக்கிறார். வாழ்க்கை எப்படி இருக்கிறது என கேட் கிறார்.

அதற்கு அவர் கூறினார். ஆரம்பத்தை விட சிறிய மாற்றங்களுடன் போகிறது என்றார். ஆரம்பத்தில் நீ கொடுத்த நாய் என்னைப் பார்த்து குரைக்கும். மனைவி பேப்பரை கொண்டு வந்து தருவாள். இப் போது அதே நாய் பேப்பரை கொண்டு வந்து தருகிறது. என் மனைவியோ என்னைப் பார்த்து குரைக்கிறாள் என்றார்.


## திருமணம் முடித்த பின்பு ஆணொ ருவன் இன்னொரு பெண் மீது கொள் வது காதலல்ல காமம் என்பேன்.

அன்பின் வியா அண்ணா!

திருமணம் முடித்த பின்பு ஆணொ ருவன் இன்னொரு பெண் மீது கொள் வது காதலல்ல காமம் என்பேன். தங்க ளின் கருத்து யாது?

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

தம்பி அகிலேஸ்வரா காதலுக்கும் காமத்திற்கும் பெரிய வித்தியாசம் கிடை யாது 'தல்' போய் 'மம்' வருகிறது அவ்வ ளவுதான்.




அன்பின் வியா அண்ணா!

குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு என்று கூறுகிறார்களே அது எப்படி?

எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்

குடித்த பியர் காலையில் எப்படி வெளி யேறுகிறதோ அதே போல் தான் அவனது பேச்சும் சர்ர்... ரெண்டு போய் விடும்.

அன்பின் வியாசரே!

பணம் அதிகமாய் இருக்கும் இடத் தில் மகிழ்ச்சி சிறிதும் இருப்பதில் லையே?

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

மகிழ்ச்சியை வித்துத்தான் பணம் சம்பாதித்திருப்பார்கள். வித்த மகிழ்ச் சியை மறுபடி வாங்க முடியுமா என்ன!

வணக்கம் அண்ணா!

இன்றைய இளையோர் தங்களி டம் மோட்டார் சைக்கிள் இருக்கின் றது என்ற நினைப்பில் தலைதெறி க்க ஓடும் இத்தலைமுறையினரைப் பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்.

ம.அ.மரியஜெனிற்றா, சாவகசசேரி

வீதிகளில் நடக்கும் கோர விபத்துக் களை படங்களுடன் ஊடகங்கள் முன்பக் கத்தில் போடுவது இப்ப டிப்பட்டவர்கள் திருந்துவதற்கே.

ஆனால் முடியவில்லையே! ஒரு திரைப்படத்தில் சத்தியராஜ் கூறுவார். உங்களையெல்லாம் ஒரு பெரியார் இல்லடா ஓராயிரம் பெரியார் வந்தாலும் திருத்த முடியாது என்று.

அன்புடன் வியாசருக்கு!

தம்பியுடையான் மீண்டும் இமயத் தில் ஏறத் தொடங்கி விட்டார். இமயம் தொட கவிதையை நீங்கள் ரசிப்பது ண்டா?

சி.வீரா, இணுவில்

ரசிப்பது மட்டுமல்ல. அவருக்கு ஊக்கம் கொடுத்து எழுதச் சொல்வதே நாமதானே!

வியாசரே!

இப்போது யாழ்ப்பாணத்தில் காதல் பறவைகளை பார்க்க முடிகிறதே?

அருள், நவாலி

ஓ... அதுவா? அது இந்த கால கூதலு க்கு வரும் காதல்கள். கொஞ்சம் வெயில் அடித்தால் போதும் பனிபோல் ஒழிவிடும்.


அன்பின் வியாசரே!

நம் நாட்டில் ஊடக சுதந்திரம் பற்றி உமது கருத்தென்ன?

கிரு.செந்தூரன், பருத்தித்துறை

ஊடகத்திற்கு சுதந்திரம் இருக்கி ன்றதா? ஐய்யய்யோ எனக்கு அது தெரி யாமல் போய்விட்டதே!

# தாய் உட்பட இரு குழந்தைகள் லண்டனில் சடலங்களாக மீட்பு



இலங்கையை பிறப்பிட மாகக் கொண்ட இரண்டு குழந்தைகள் மற்றும் தாயார் வடமேற்கு லண்ட னில் சடலங்களாக மீட்க ப்பட்டனர்.

ஏழு மாத ஆண் குழ ந்தை மற்றும் ஒரு ஐந்து வயது சிறுவன் உள்ளிட்ட இரண்டு இளம் குழந் தைகளின் சடலங்களை யும் அவர்களின் தாயாரது சடலத்தையும் பிரித்தானிய பொலிசார் மீட்டுள்ளனர்.

வடமேற்கு லண்டன் பகுதியில் நேற்று பிற்பகல் லண்டன் நேரம் 5.20ற்கு பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிசாரே இந்த சடலங்களை மீட்டுள்ளனர்.

இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட 33 வயதுடைய இளம் தாய் தனது இரண்டு குழந்தைகளையும் கொலை செய்த பின் தானும் தற்கொலை செய்து கொண்டு இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும், தாயினுடைய மரணம் தற்கொலையினால் சம்பவித்ததா? என்ற சந்தேகம் தொடர்வதாகவும் தெரிவித்த பொலிசார், இரண்டு குழந்தைகளும் கொலை செய்யப்பட்டு இருப்பது உறுதியாகி இருப்பதாகவும் தெரிவித்தனர். இந்த மரணம் குறித்த விசாரணையை ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் மேற்கொள்கின்றனர். -(அ-2)

# நிதி நிறுவனங்கள் இணையும் போது பணியாளர்களைக் குறைக்கக்கூடாது

நிதி நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்படும் போது, அதன் பணியாளர்களை குறைக்க கூடாது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. மத்திய வங்கியின் நாணய சபையின் தீர்மானங்களை மேற்கொள்ளும் குழு நேற்றுமுன்தினம் ஒன்று கூடி இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருப்பதாக லங்கா பிஸ்னஸ் ஒன்லைன் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

நிதித்துறை நிறுவனங்களில் உச்ச அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அவற்றை ஒன்றிணைக்கும் போது, அதன் பணியாளர்களை குறைப்பது குறித்தும் ஆலோசிக்கப்படுகின்றன. ஆனால் முன்னேற்றகரமான சூழலில் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் அவசியப்படுவார்கள் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஊடகவியலாளர்களின் தேவைகளை அடையாளங்காண நடவடிக்கை

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு முன்மொழிவில் கலைஞர்களுக்கும் ஊட கவியலாளர்களுக்கும் வழங்கப்படவுள்ள சலுகைகள் தொடர்பாக ஜனாதிபதி தெரி வித்த விடயங்களுக்கமைய அந்த சலுகை களை அடையாளங்காணும் நடவடி க்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மக் கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவி த்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலாளர் அலு வலகத்தில் அமைக கப்பட்டுள்ள ஊடக அமைச்சின் ஊடக இணைப்பு மத்திய நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறி னார்.

அவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த மத்திய நிலையத்தினூடாக மத்திய மாகாண த்தின் மூன்று மாவட் டங்களின் தேவை கள் தொடர்பாக பணியாற்ற முடியும். அதனூடாக ஊடக வியலாளர்கள் இணைப்பு உதவியையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் எதிர்காலத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இவ்வாறான இணைப்பு அலுவலகங்களை ஆரம்பிப்ப தற்கு திட்டமிட்டுள்ளோம் என்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் மத்திய மாகாண முதல் அமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்பட பல மக்கள் பிரதிநிதிகள் - கண்டி மேயர் எச்.எம்.காமினி செனவிரத்ன உட்பட பல அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றவியல் நடைமுறை சட்டப்படி முஷாரப் மீதான வழக்கு நடக்கும்

### நீதிமன்றம் தெரிவிப்பு



(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மீதான தேசத்துரோக வழக்கில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பயன்படுத்தப்படும் என்று அந்நாட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இஸ்லாமாபாத் சிறப்பு நீதிமன்றத்தில் இதுதொடர்பான வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முஷாரபின் வழக்குரைஞர் அன்வர் மன்சூர், இந்த வழக்கில் குற்றவியல் நடைமுறைச சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று வாதிட்டார்.

இதற்கிடையே, முஷாரபின் மருத்துவ அறிக்கையில், நீதிமன்றத்திற்கு ஆஜராவதற்கு முன்பு அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை என்று கூறிய சிறப்பு நீதிமன்றம், எதிர்வரும் 16ஆம் திகதி முஷாரப் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தர விட்டது.

இந்த வழக்கில் அவர் நேரில் ஆஜராக 3 முறை விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. மேலும், அதனை நீட்டிப்பதற்கான மனுவை முஷாரபின் வழக்குரைஞர் தாக்கல் செய்யவில்லை என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. (2)



மியன்மாரிற்கு டென்மார்க் இளவரசி மேரி விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போது யாங்கூன் நகரிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவோரிடம் அவர் நலம் விசாரித்ததைப் படத்தில் காணலாம்.

## இந்திய - அமெரிக்க உறவை பலப்படுத்த ஒபாமா விருப்பம்

(வோஷிங்டன்)

**இந்தியா-அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவு மேலும் வலுவடையும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**



இந்திய துணைத் தூதர் தேவயானி கோப்ரகடே அவரது பணிப் பெண்ணுக்கு விசா பெற்றதில் முறைகேடு செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டதால் அமெரிக்காவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர்களுக்கான சலுகைகள் பறிக்கப்பட்டுள்ளன. அண்மையில் இந்தியா வந்திருந்த அமெரிக்க நாடாளுமன்றக் குழுவினரை சந்திக்க மக்களவைத் தலைவர் மீரா குமார் உள்ளிட்டோர் மறுத்து விட்டனர்.

இச் சூழ்நிலையில் வோஷிங்டனில் அமெரிக்க வெள்ளை மாளிகைக்கான ஊடகச் செயலாளர் ஜே கார்னி செய்தியாளர்களிடம் கூறியதாவது,

அரசியல், கலாசாரம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவுடனான உறவை வலுபடுத்துவது மிகவும் முக்கியமானதாகும். எனவே இந்தியாவுடனான உறவை பலப்படுத்த ஜனாதிபதி ஒபாமா விரும்புகின்றார்.

ஒபாமாவின் முதல் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த கடும் முயற்சிகள் மேற்கொண்டார். அவரது தற்போதைய நிர்வாகத்திலும் இந்தியாவுடனான உறவை தொடர்ந்து கடைபிடிக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்றார்.

இந்திய துணைத் தூதர் தேவயானி கோப்ரகடே விவகாரம் குறித்து கருத்து தெரிவிக்க மறுத்த ஜே கார்னி, ஜனாதிபதி ஒபாமா அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், இந்த விவகாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து தான் எதுவும் கூறமுடியாது என கார்னி குறிப்பிட்டார். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன கெர்ரி, ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்து வெளியுறவுக்கொள்கை குறித்து வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தியதாகவும் கார்னி கூறினார். (2)

## தெற்கு சூடான் கலவரம்; 2½ இலட்சம் பேர் இடப்பெயர்வு

### ஐ.நா. தெரிவிப்பு

(நியூயோர்க்)

தெற்கு சூடான் கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. துணை செய்தித் தொடர்பாளர் ஃபர்ஹான் ஹக் கூறியதாவது,

தெற்கு சூடான் முன்னாள் துணை ஜனாதிபதி ரீக் மாச்சர் ஆதரவு கிளர்ச்சிப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய்வளம்மிக்க பென்டியூ நகரத்தின் மீதுதான் முழுகவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அந் நகரத்தில் நேற்று முன்தினம் காலையில் குண்டு வெடித்ததாகவும், மோதல் நேரிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் 8ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேறி ஐ.நா. முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

எனவே, பென்டியூ நகரத்தில் இன்னும் பலருக்கு அடைக்கலம் கொடுக்கும் வகையில் பாதுகாப்புப் பகுதியை ஐ.நா. படையினர் விரிவுபடுத்தியுள்ளனர்.

இதேவேளை, ஐ.நா. அமைதிப்படை தலைவர் ஹெர்வ் லாட் சூஸ் கூறுகையில்,

தெற்கு சூடான் முழுவதும் 60ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஐ.நா. முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

தெற்கு சூடான் கலவரத்தால் ஒரு இலட்சம் பேர் வரை உகாண்டாவிலும் கடந்த 2 நாட்களில் மட் டும் 32 ஆயிரம் பேர், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர், கென்யா மற்றும எத்தியோப்பி யாவிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மொத்தத்தில் இரண்டரை இலட்சம் பேருக்கு மேல் புலம் பெயர்ந்து விட்டனர்.

எனினும், டிசெம்பர் 15 ஆம் திகதி கலவரம் மூண்டதில் இருந்து இதுவரை ஆயிரம்பேருககு மேல் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு சூடானுக்கு மேலும் 5ஆயிரத்து 500 வீரர்களை அனுப்ப ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் அனுமதி அளித்துள்ளது. கூடுதலாக 850 வீரர்களை நேபாள அரசு அனுப்புகிறது. (2)

## இப்ராஹிம் பற்றி அறியோம்

### பாக். அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

தாவூத் இப்ராஹிம் எங்கள் நாட்டில் இல்லை என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

மும்பையின் நிழல் உலகத்தாதா தாவூத் இப்ராஹிம் இந்தியாவால் மிகவும் தேடப்படும் குற்றவாளி ஆவான். அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய தாவூத் இப்ராஹிம் 1993ஆம் ஆண்டு மும்பை குண்டுவெடிப்பிற்கு தலைமறைவாகி பாகிஸ்தானின் கராச்சி நகரில் வசித்து வருவதாக இந்தியா கூறி வருகிறது.

இந்நிலையில்பாகிஸ்தானில் தங்கியிருக்கும் தாவூத் இப்ராஹிமை அமெரிக்காவுடன் இணைந்து பிடிக்க திட்டமிட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் சுஷில குமார் ஷிண்டே நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதற்கு பாகிஸ்தான் மறுப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து பாகிஸ்தான் வெளியுறவு துறை செய்தித்தொடர்பாளர் தன்ஸிம் அஸ்லாம் கூறியதாவது

தாவூத் இப்ராஹிம் எங்கள் நாட்டில் இல்லை என்று இந்திய நிர்வாகத்திடம் நாங்கள் தொடர்ந்து கூறி வருகிறோம். கடந்த காலங்களிலும் இதுகுறித்து இந்தியா பிரச்சினை எழுப்பியது. நாங்கள் இங்கு தேடிப்பார்த்தோம். தாவூத் இப்ராஹிம் இங்கு இல்லை என்று இந்தியாவிடம் முன்பே கூறியுள்ளோம் என அவர் கூறினார். (2)

## குடியரசு நாட்டின் ஜனா. இராஜினாமா

(பென்கூயி)

இரு மதத்தினர் மோதலால ஏற்பட்ட கலவரம் உச்சத்தை அடைந்ததைதொடர்ந்து மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டின் இடைக்கால ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்தார்.

ஜோடோடியா கடந்த ஆண்டு மார்ச் மாதம் இராணுவ புரட்சி மூலம் ஆட்சியை பிடித்து ஜனாதிபதியாக பொறுபபேற்றார். இந்நிலையில் இந்நாட்டில கடந்த ஒரு மாதமாக இரு மதத்தினரிடையே மோதல்வெடித்து நாடு முழுவதும் கலவரமாக பரவியுள்ளது.

இந்தக் கலவரத்திற்கு இதுவரை நூற்றுக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மதத்தினர் அகதிகளாக அயல் நாட்டிற்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். இராணுவம் குவிக்கப்பட்டும், அங்கு கலவரம் ஓய்ந்தபாடில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி ஜோடோடியா தனது பதவியை இராஜினாமா செய்தார். (2)




## ஆப்கான் ஜனா. தேர்தலையடுத்தே பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்து

(வோஷிங்டன்)

அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் உடனடியாக கையெழுத்திட வாய்ப்பில்லை. எதிர்வரும் ஏப்ரல் மாதம் அந்நாட்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதன்பின்னர் ஹமீத் கர்சாய் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தலிபான்களை ஒடுக்குவதற்காக ஆப்கானில் முகாமிட்டுள்ள நேட்டோ படைகளை இந்த ஆண்டு இறுதிக்குள் முற்றிலுமாக வெளியேற்ற ஐ.நா. திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக ஆப்கானில் அமெரிக்கப் படைகள் தங்கும் கால அவகாசத்தை நீட்டிக்க ஒபாமா முன்வந்தார்.

இதுகுறித்து அமெரிக்க சுற்றுப் பயணத்தின்போது ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய்க்கும் ஜனாதிபதி ஒபாமாவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கடந்த ஆண்டு முக்கிய உடன்பாடு ஏற்பட்டது.

அதனையடுத்து, இதற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்க அரசு ஈடுபட்டு வருகிறது. ஆனால் ஆப்கானில் எழுந்துள்ள எதிர்ப்பு காரணமாக அதிபர் ஹமீத் கர்சாய் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட காலதாமதம் செய்து வருகிறார்.

ஆப்கானில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அந்த தேர்தலுக்குப் பின்னர் ஹமீத் கர்சாய் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பந்தத்தில் சில வாரங்களில் ஹமீத் கர்சாய் கையெழுத்திடுவார் என அமெரிக்க வெள்ளைமாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜே கார்னி கூறியுள்ளார்.

ஏற்கனவே, அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான கடைசித் திகதி முடிந்துவிட்டது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுகுடி சொற்கேளாது;
சாகிறவன் மருந்து குடியான்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வாளாயுதக் கும்பல் உருவெடுத்த மர்மம் என்ன?

வட மாகாணத்தின் அமைதி நிலைக்குப் பல பக்கங்களாலும் ஆபத்து உருவாகி வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

போர்க் காலத்தில் தமிழ் மக்கள் பட்ட அவலங்களும் துன்பங்களும் கொஞ்சமல்ல.

வட பகுதியைச் சேர்ந்த தமிழர் ஒருவர் கொழும்பிற்குச் செல்வதாக இருந்தால் அதற்கான பாஸ் நடைமுறைகள் போதுமென்றாகியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து யாரேனும் கொழும்பு செல்வதாயின் அதற்கான அனுமதியை பத்திரிகைகளில் பார்த்தே அறியும் அளவில் நிலைமை இருந்தது என்றால், மிகுதி நாம் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இருக்க மாட்டாது. அவ்வாறாக நாங்கள் பட்ட துன்பங்கள் ஏராளம்.

2009-ம் ஆண்டு போருக்குப் பின்னான எங்கள் துன்பம் வேறு வகையாக இருந்தது. இனந் தெரியாதவர்கள் சுட்டதில் பலி என்ற படலமும் அதனைத் தொடர்ந்து கிறீஸ்பூத விவகாரமும் எங்கள் இதயத்தின் துடிப்பை அதிகப்படுத்தின.

இதனோடு கொள்ளை, களவு என்ற கொடூரம் வடபுலத்து மக்களின் நிம்மதியை குழப்பி கூத்தாடியது-கூத்தாடுகின்றது. இவற்றின் மத்தியில் இப்போது வாளாயுதம், சூலாயுதம் கொண்ட கும்பல் பற்றியசெய்திகளால் மக்கள் கடும் பீதிக்குள்ளாகி உள்ளனர்.

கட்டிளம் பருவத்தின் நுழைவாயிலில் காலடி வைக்கின்ற இளைஞர்களே இக்கும்பலில் இடம் பெற்றுள்ளனர் என்ற செய்தி அதிர்ச்சியைத் தருவதாகும்.

வாளாயுதம் கொண்ட கும்பல் என்பதற்கு அப்பால், அந்தக் குழு இயங்குகின்ற பின்னணி குறித்து வெளிவரும் தகவல்கள் பேரதிர்ச்சியைத் தரக்கூடியவை.

அதாவது யாழ்.குடாநாட்டில் இயங்கும் லீசிங் நிறுவனங்களில் சில நிறுவனங்கள் தங்களின் கடன் வருமதிகளை மீட்பதற்காக, இந்தக் கும்பலுக்கு தண்ணி ஊற்றி, தீனி இட்டு திசை மாற்றியுள்ளன என்ற தகவல் சாதாரணமானதல்ல.

வன்னிப் போர் முடிந்த கையோடு, வடபுலத்துக்குள் நுழைந்த லீசிங் கம்பனிகள் ஆசை காட்டி தங்கள் வர்த்தகத்தைச் சிறப்பாகச் செய்தன. சொல்புத்தியும், சுயபுத்தியும் வேலை செய்யாதவாறு லீசிங்கில் வீழ்ந்தவர்கள், தங்கள் கழுத்தில் தாங்களே கயிறு மாட்டிய சோகம் எங்கள் மண்ணில் நடந்தேறியமை வேதனைக்குரியது.

நிலைமை இப்படியா? என்று ஏங்கும் நேரத்தில், வாளாயுதக் கும்பலை தங்களின் தேவைக்காக யாழ்ப்பாணத்தில் இயங்கும் குறித்த சில கம்பனிகள் பயன்படுத்தின என்றால் இந்த நிறுவனங்கள் பற்றி ஆராய்வது மிகவும் அவசியமாகும்.

இது தொடர்பில் வடக்குமாகாண அரசு மௌனம் காக்காமல் உண்மை நிலையை கண்டறிய வேண்டும்.

உயர் கல்வி கற்க வேண்டிய எங்கள் இளம் பிள்ளைகள் வாளாயுதத்தோடு அலைவதற்கு காரணம் என்ன? என்பதைக் கண்டறியா விட்டால் இந்த மண்ணில் இன்னும் இனந்தெரியாத கொலைகள் மலியும். மறந்து விடாதீர்கள்.

## திருமலை மாணவர்கள், மூதூர் பணியாளர்கள்

# படுகொலைகள் தொடர்பில் ஸ்ரீபன் ராப் கேள்வி!

(கொழும்பு)

திருகோணமலையில் 2006-ம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்கள் மற்றும் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 17 பணியாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் என்னவென அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் போர்க்குற்ற விவகார தூதுவர் ஸரீபன் ஜே.ராப் இலங்கை சட்டமா அதிபரிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள இலங்கையின் சட்டமா அதிபரான பாலித பொணான்டோ, ஐந்து மாணவர்களின் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும், தொண்டு நிறுவனப் பணியாளர்களின் கொலைகள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலைமை தொடர்பில் ஸ்ரீபன் ஜே.ராப் கேள்வி யெழுப்பிய போது, அவ்வாறானவர்களுக்குப் புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். (செ-11)

# சொற்பொழிவு

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா கடந்த 2-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 20-ம் திகதி வரை 19 தினங்கள் நடைபெற்றுவருகின்றன.

இவ் உற்சவ காலங்களில் தினமும் 5.30 மணிக்கு மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் சமயச் சொற்பொழிவை நிகழ்த்தி வருகின்றார். (அ-2)

# மாணவர்களுக்காக விசேட பேருந்து சேவை

யாழ்.மாவட்டத்தில் இருந்து தலைமைத்துவப் பயிற்சிக்காக மின்னேரியா, மாதுறுஓயா ஆகிய இடங்களுக்கு செல்லவிருக்கும் மாணவர்களினதும் மற்றும் கல்விசார் அமைப்புக்களினதும் வேண்டுகோளிற்கிணங்க எதிர்வரும் 18-ம் சனிக்கிழமை திகதி காலை 6 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து விசேட பேருந்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்சாலை கோண்டாவில் இ.போ.ச.சாலை ம்காமையாளர் செ.குருபாலச்செல்வம் அறிவித்துள்ளார்.(செ-2)

# இரு மயில்களால் விமானத்திற்கு சேதம்


(கொழும்பு)

மத்தல சர்வதேச விமான நிலையத்தில் "பிளைய் டுபாய்" என்ற டுபாய் விமானமொன்றை இரு மயில்கள் சேதப்படுத்தியுள்ளன.

இதனையடுத்து விமானம் உடனடியாக தரையிறக்கப்பட்டு பயணிகள் ஹோட்டல்களுக்கு மாற்றப்பட்டு மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, மத்தல சர்வதேச விமான நிலையத்தில் பறவைகள் விமானத்தை சேதப்படுத்தும் சம்பவங்கள் முன்னரும் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### பட்டது பட்டேற்றும்

ஐந்தெழுத்தை நெஞ்சகத்தில்
துஞ்சாமல் சொல்லுமவர்- தங்கம்
துரியத்தில் வாழ்வாரெடி

இன்சொல் விளை நிலனாய்
ஈதலே வித்தானால்-தங்கம்
இன்பம் பெருகுமடி

# ஆண்டவர் எம்மில் பூரிப்படைய எம் வாழ்வை மாற்றுவோம்

இன்று நாம் இயேசுவின் திருமுழுக்குப் பெருவிழாவை கொண்டாடுகின்றோம்.

கத்தோலிக்க திருச்சபையின் அருளடையாளங்கள் பற்றி நோக்கும் போது முதலில் திருமுழுக்கு அருளடையாளம் பற்றிச் சிந்திக்கலாம். திருஅவையின் ஏழு அருளடையாளங்களில் முதலாவது திருமுழுக்கு ஆகும்.

இது திருவருள் நிறைந்த ஓர் அடை யாளம், இது இயேசுவில் புதிய பிறப்பை நமக்கு அளிக்கின்றது. அவரின் மரணம் மற்றும் உயிர்ப்பின் பேருண்மையில் எமக்கு பங்கு தருகின்றது. பாவத்தின் மன்னிப்பை நமக்கு வழங்கி, கடவுளின் குழந்தைகள்

## பரமபிதா காட்டிய பாதை

மற்றும் அவரின் திருஅவையின் உறுப்பினர்கள் என்ற புதிய சுதந்திரத்தை நமக்குக் தருகின்றது. புதிய மற்றும் மகிமையான நம்பிக்கையை நமக்குக் தருகின்றது. திருமுழுக்கு, திருஅவையின் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியில் நமக்கு ஒரு பங்கையும் அளித்துள்ளது.

திருமுழுக்கு, கடவுள் தமக்கும் நமக்குமிடையே கட்டியுள்ள பாலம் போன்று இருக்கின்றது. இந்தப் பாதையின் வழியாக நாம் அவரை அடைய முடிகின்றது.இது நமது நம்பிக்கைக்கு வாயிலாக இருக்கின்றது.

இயேசு தமது பொதுவாழ்வை ஜோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றுத் தொடங்குகிறார். ஒருவேளை தெய்வத்திருமகனின் பாதங்களைத் தொட்ட பொழுதே தன்னைப் படைத்த வரை தொட்டுக் கறைப்படுத்திவிட்டோமே என்று தண்ணீர் எண்ணியிருக்கலாம்.

அவரை தொட்டதால்தண்ணீரின்தீட்டு நீங்கி, அது புனித நீராகி விட்டது. அதனால் என்னவோ ஜோர்தான் நதி உலகின் புனித நதியாகக் கருதப்படுகிறது.

ஒட்டகமுடி ஆடை அணிந்து, இடையில் வார்க்கச்சை கட்டி, வெட்டுக் கிளியும், காட்டுத்தேனும் உண்டு வாழ்ந்த கடுந்தவமுனிவர் திருமுழுக்கு யோவான். "என்னைவிட வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரைக் கூட அவிழ்க்க நான் தகுதியற்றவன். நான் உங்களுக்கு நீரால் திருமுழுக்குக் கொடுத்தேன். அவரோ உங்களுக்குத் தூய ஆவியாரால் திருமுழுக்குக் கொடுப்பார்" என்று தன் சிறுமையை ஏற்று இயேசுவின் பெருமையை பாடிய திருமுழுக்கு யோவான் தான் இயேசுவுக்குத் திருமுழுக்கு கொடுத்தார்.

இயேசு வாழ்ந்த காலத்தில் யூதர்களிடையே பாவமன்னிப்புக்காக இருந்த சடங்குகளில் ஒன்று திருமுழுக்கு. புறவினத்தாருக்கு இது கொடுக்கப்பட்ட போது அவர்களை யூதசமயத்தில் இணைக்கும் சின்னமாக இது காணப்பட்டது.

இயேசுவோ பாவநிழல் படாதவர். புறவினத்தாரும் அல்லர். ஆயினும் மக்களைப்புனிதப்படுத்த வந்த புண்ணிய தேவனுக்குதிருமுழுக்குத்தேவையா? எனினும் எல்லா வகையிலும் சாதாரண மக்களைப்போல் வாழவிரும்பிய இயேசு, பாவிகளின் சார்பில் பரமதந்தையிடம் மன்னிப்புக் கேட்கவந்த இயேசு, சட்டங்களை அழிக்க அன்று, நிறைவேற்றவே வந்த இயேசு, ஜோர்தான் நதியில் தன் திருமுழுக்கைத் தனியே பெறவில்லை. மக்களோடு, மக்களாய் கலந்து, கரைந்து பாவிகளின் வரிசையில் நின்று திருமுழுக்குப் பெற்றார்.

தன் மகனோ, மகளோ அர்த்த முள்ள, பெருமை சேர்க்கும் செயல்களைச் செய்யும்போது, அவர்களை அரவணைத்து, நெற்றியில் முத்தமிட்டு, ஆசீர்வதிக்கும், பெற்றோரைப் நாம் நம்மிடையே பார்த்திருக்கிறோம். நாமும் இந்த அரவணைப்பையும், ஆசீரையும் அனுபவித்திருக்கிறோம். இது தான் அன்று ஜோர்தானில் நடநதது.

மக்களோடு மக்களாகத் தன்னை முழுவதும் இணைத்துக் கொண்ட இயேசுவைக் கண்டு ஆனந்த கண்ணீர் பொங்க தந்தையாம் இறைவன் சொன்ன வார்த்தைகள்: "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்." உள்ளப் பூரிப்புடன், உன்னத இறைவன் இந்த வார்தகைகளை நம் ஒவ்வொருவருக்கும் சொல்லக் காத்திருக்கிறார்.



இயேசு திருமுழுக்குப் பெற்ற நிகழ்வின்போது ஒரே கடவுளின் மூன்று ஆட்களும் பிரசன்னமாகி இருக கிற மிக முக்கியமான வேதாகமப் பகுதியை இன்றைய திருவிழா சுட்டிக் காட்டுகின்றது: "இயேசு யார் என்ற இயேசுவின் அடையாளத்தையும், இயேசுவின் வாழ்வு எப்படி இருக்கும் என்ற இயேசுவின் பணியையும்" "இயேசு தமது பொதுவாழ்வை ஜோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றுத் தொடங்குகிறார் என்பதையும்" இத் திருவிழா தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

நமது வாழ்வினைக் கண்டு இறைவன் "இவரே என் அன்பார்ந்த மகன் அல்லது மகள்", இவரில் நான் பூரிப்பு அடைகிறேன்" என்று சொல்லுவாரா? இன்று நம் உலகில் பல போலி இறைவாககினர்களும், போலி இறை வாக்குகளும், போலிப் பரிந்துரைகளும் புகுந்துள்ள சூழ்நிலையில். நாம் ஆண்டவரில் நிலைத்திருப்போம். தேர்ந்து தெளிந்து நம் இதயங்களில் இறைவனை ஏந்துவோம்.

அப்போது அன்னையும் தந்தையுமான இறைவன், நம்மை வாரி அணைத்து, உச்சி முகந்து, இந்த அன்பு மொழிகளை நம் ஒவ்வொருவருக்கும் சொல்வார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண ரீதியிலான சதுரங்கப் போட்டி -2013 முடிவுகள்

**15 வயதுப் பிரிவு ஆண்கள்**

முதலாமிடம் ஆர்.டினோஜன் (யாழ். இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் ரி.அபினேஷ் (யா/ஹாட்லி கல்லூரி), மூன்றாமிடம் எஸ்.கோபிதன் (யா/ஹாட்லி கல்லூரி).

**15 வயதுப் பிரிவு பெண்கள்**

முதலாமிடம் எஸ்.ஷன்சிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் எஸ்.உமையால் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் எல்.லாவண்ஜா வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

**திறந்த பிரிவு ஆண்கள்**

முதலாமிடம்எஸ்.பவகணேஷ்(பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் ரி.ப்பிரமன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), மூன்றாமிடம் ஏ.அன்று (யாழ்.இந்துக் கல்லூரி).

**திறந்த பிரிவு பெண்கள்**

முதலாமிடம் வி.நிதர்சனா (யா/மெதடிஸ் மகளிர் உயர்தர பாடசாலை), இரண்டாமிடம் யு.சுமித்ரதேவகி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் என்.தனுஷ்பிரியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி). (கு)

## புனித அந்தோனியார் நடத்தும் வருடாந்த விளையாட்டு போட்டி

பெரியவிளான் புனித அந்தோனியார் இளையோர் ஒன்றியம் நடத்தும் பங்கு மக்களிற்கான வருடாந்த விளையாட்டுப் போட்டி இடம் பெறவுள்ளது.

இவ்விளையாட்டுப்போட்டியானது இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணி முதல் பெரியவிளான் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அருட்தந்தை சந்திரபோல் அடிகளார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட இளைஞர் ஒன்றிய இயக்குநர் அருட்தந்தை எம்.வீ.ஈ இரவிச்சந்திரன் அடிகளார் கலந்து கொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக பெரியவிளான் றோ.க.த. பாடசாலை அதிபர் திருமதி ட.செபமாலை நாயகியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பகுதித் தலைவர் விஜயகுமார் தம்பதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பங்கு மக்களிற்கான விளையாட்டு நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம் பெறவுள்ளது.

(க-23)

## தைப்பொங்கலை முன்னிட்டு; சண்டிலிப்பாய் இ.க. நடத்தும் இன்றைய கிரிக்கெட் ஆட்டங்கள்

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் "தைப் பொங்கலை" முன்னிட்டு வருடாந்தம் நடாத்தி வரும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இவ் வருடமும் இடம்பெறவுள்ளன.

வட மாகாண ரீதியில் இடம்பெறவுள்ள இச் சுற்றுப் போட்டியில் 50 அணிகள் பங்கு கொள்கின்றன.

அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக இப் போட்டிகள் அமையவுள்ளன.

பீ குழுவினரிற்கான போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் காலை 7.30மணி முதல் இடம்பெறவுள்ளன.



**மோதும் அணிகள் விபரம்**

சங்கானை பிரதேச செயலக வி.க எதிர் உடுவில் உதயசூரியன் வி.க 7.30.மணி இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கொக்குவில் காமாட்சி வி.க பீ அணி 9.30மணிக்கு மோதவுள்ளது.

இணுவில் கலையொளி வி.க எதிர் லெவின் ஸ்ரார் வி.க பீ அணி 8.00மணி . இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் வராகி வி.க அணி 10.00மணி க்கு மோதவுள்ளது.

தெல்லிப்பழை கலையொளி வி.க எதிர் மானிப்பாய் பிரீமியர் லீக் வி.க 8.30மணி . இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் உடுவில் கிங்ஸ்ரார் வி.க அணி 10.30மணி க்கு மோதவுள்ளது.

ஆறுகால்மடம் காந்திஜி வி.க எதிர் முத்துத்தம்பி வி.க பீ அணி 9.00மணி . இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் உடுவில் கிங் ஸ்ரார் வி.க அணி 11.00மணி க்கு மோதவுள்ளது.

குருநகர் றோயல் கிங்ஸ் வி.க எதிர் ஈகிள்ஸ் வி.க 11.30மணி . இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் அளவெட்டி மத்தி வி.க அணி 1.30மணி க்கு மோதவுள்ளது.

பொற்பதி வி.க எதிர் கொடிகாமம் சுப்பர் சிக்ஸ் வி.க 12.00மணி. இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கோப்பாய் சென் மேரிஸ் வி.க அணி 2.00மணிக்கு மோதவுள்ளது.

கார்மேல்போய்ஸ் வி.க எதிர் உடுவில் யுத் சலஞ்சர்ஸ் வி.க 12.30மணி. இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் ஏ.பீ.எல் வி.க அணி 2.30மணி க்கு மோதவுள்ளது.

உடுவில் மத்தி வி.க எதிர் அச்சுவேலி றொக்கட் வி.க 1.00மணி. இப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கரவெட்டி ஞானம்ஸ் வி.க அணி 3.00மணி க்கு மோதவுள்ளது. (க-23)



முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனம் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் அணிக்கு 3 பேர் கொண்ட கூடைப்பந்தாட்ட போட்டியை அண்மையில் நடத்தியது. இதில் ஜாங் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது. அத்துடன் இடம்பெற்ற தனி நபருக்கான எய்தல் போட்டியில் க.லதீபன் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றவரை படத்தில் காணலாம். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஷேவாக்கை கழட்டிவிட்ட டில்லி

ஏழாவது ஐ.பி.எல்.போட்டிகளுக்கான வீரர்கள் தெரிவில் கெவின் பீற்றர்சன், விரேந்தர் ஷேவாக் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோரை டில்லி அணி கழட்டி விட்டுள்ளது.

இதன்படி அவர்களை அணியில் இணைத்துக் கொள்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்கள் மூன்று பேரும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.பி.எல். ஏலத்தில் கலந்துக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை மும்பை இந்தியன்ஸ் அணி தமது இரண்டாவது வெளிநாட்டு வீரராக லசித் மலிங்கவை தெரிவு செய்துள்ளது.



லசித் மலிங்கவின் அண்மைக்கால திறமை வெளிப் படுத்தலின் அடிப் படையில்அவரை மும்பை இந்தியன்ஸ் அணி கை விடலாம் என்று கருதப்பட்டபோதும் அவரையே மீண்டும் இணைத்துக் கொள்ள அணி நிர்வாகம் தீர்மானித் துள்ளது. (க)

## மெஸ்ஸி அதிரடி; பார்சிலோனா வெற்றி




இரு மாதங்களுக்குப் பின் பார்சிலோனா அணியில் இணைந்த நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி இரு கோல்கள் அடித்து தனது அணிக்கு வெற்றி தேடித்தந்தார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த இரு மாதங்களாய் மெஸ்ஸி ஓய்வில் இருந்தார். இது பார்சிலோனா அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.

இந்நிலையில் ஸ்பெயினில் நடைபெற்று வரும் ஸ்பானிஸ் கிண்ண காற்பந்து போட்டியில் கிடாபி அணிக்கு எதிரான ஆட்டத்தில் மெஸ்ஸி களமிறங்கினார்.

இந்த ஆட்டத்தில் 4:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அபார வெற்றி பெற்றது. மெஸ்ஸி இரு கோல்களை அடித்து அசத்தினார். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து வெற்றி



நியூசிலாந்து-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான இரண்டு 20 ஓவர்கள் கொண்ட தொடரின் முதல் போட்டி நேற்று ஆக்லாந்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் மெக்கலம் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

குப்தில்-ரைடர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்கள். குப்தில் 25 ஓட்டங்களிலும் ரைடர் 22 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். அடுத்து வந்த மெக்கலம் அதிரடியாக விளையாடி 60 ஓட்டங்கள் குவித்தார். அவருடன் சேர்ந்து ரோஞ்சி 48 ஓட்டங்கள் சேர்த்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இருவரது அதிரடி ஆட்டத்தில் நியூசிலாந்து 5 விக்கெட் இழப்பிற்கு 189 ஓட்டங்கள் குவித்தது. ஒருநாள் போட்டியில் 36 பந்தில் சதம் அடித்த கோரி அண்டர்சன் டக் அவுட் ஆகி ஏமாற்றினர்.

பின்னர் 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் களம் இறங்கியது. ஆனால் அந்த அணியால் 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 108 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது இதனால் நியூசிலாந்து 81 ஓட்டங்களில் வெற்றி பெற்று 1-0 என முன்னிலையில் உள்ளது. நியூசிலாந்து வீரர் நேதன் மெக்கலம் 4 ஓவர்கள் வீசி 24 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 4 விக்கெட் வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணியின் லூக் ரோஞ்சி தெரிவானார்.

இரண்டாவது போட்டி வரும் 15-ந்திகதி வெலிங்டனில் நடக்கிறது. (கு)

# போராடுகிறது பாகிஸ்தான்



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நிறைவு பெற்றுள்ளது.

இந்தநிலையில், தமது இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவு வரை 7 விக்கட்டுக்களை இழந்து 330 ஓட்டங்களை பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மிஸ்பா குல்கக் 97 ஓட்டத்தினையும் யுனிஸ்கான் 77 ஓட்டத்தினையும் சப்ராஸ் அகமட் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக இலங்கை அணி தமது முதலாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 388 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களையும் பெற்று கொண்டன.

போட்டியின் 5-வதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## கொத்தணி...

விளைவாகவே அமெரிக்கா தொடர்பான இந்தச் செய்தியை இலங்கை வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் கடற்படைத் தளபதி வழங்கிய பிறிதொரு செய்தியில், விடுதலைப் புலிகளின் கப்பல்களை அழிப்பதற்கான துல்லியத் தகவல்களை அமெரிக்காவே தந்து 2004-ம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று வெளியிடப்பட்டுள்ள இச்செய்தியின் பிரகாரம் நோர்வேயின் முயற்சியுடனான பேச்சு ஆரம்பித்தவுடனே அமெரிக்கா செய்த பரிந்துரைகளில் ஒன்றாக இந்த கொத்தணிக் குண்டுகளைக் கொள்வனவு செய்து விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பாவிக்கும்படியான பரிந்துரை இடம்பெற்றுள்ளது.

நோர்வேப் பேச்சுக்கள் ஆரம்பித்தவுடனேயே இலங்கையின் முப்படைகளுக்கும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் விமானப் படைக்கென அமெரிக்காவால் வழங்கப்பட்ட அறிவுரையிலேயே இந்தக் கொத்தணிக் குண்டுகளைப் பாவிக்குமாறான பரிந்துரை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டு ஆதாரமும் மேற்படி செய்தியோடு இணைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## நம்பகமான...

கிறிஸ்டோபர் டீல் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற பகுதிகளுக்கு ஸ்டீவன் ரெப் நேரடியாக விஜயம் செய்துள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ள நிலையில் அமெரிக்காவின் இந்தக் கோரிக்கை இலங்கைக்கு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## இறுதிப் போரில்...

சர்வதேச அழுத்தங்களை வலியுறுத்தி வருகின்றனர். கூட்டமைப்பின் கருத்தில் எந்தளவு உண்மை இருக்கின்றதென்பதில் சந்தேகமே.

எனினும், இறுதி யுத்தத்தில் இராணுவம் யுத்த சட்டங்களுக்கு மாறாக வடக்கில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்குமானால் அது சர்வதேச குற்றச் செயலாகும். இதற்கு மனித உரிமைகள் மீறலின் கீழும் இலங்கை அரசாங்கத்தினை தண்டிக்க வேண்டும்.

இதற்கான சர்வதேச விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலைமையினை கண்டறிய வேண்டும். அதேபோல் கூட்டமைப்பின் கருத்துகளுக்கோ அல்லது புலம்பெயர் அமைப்புகளின் கருத்துகளுக்கோ முன்னுரிமை கொடுத்து சர்வதேச அமைப்புகள் பக்கச் சார்பான முடிவுகளையும் எடுக்கக் கூடாது.

மேலும், இன்று மன்னார் புதைகுழி சம்பவம் சர்வதேச அளவில் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதில் யார் குற்றவாளி என்பதிலும் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டினுள் மன்னார் மாவட்டம் இருக்கும்போது இவை எவ்வாறு இடம்பெற்றுள்ளதென்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாதமாக உள்ளது.

ஆனால், இம் மனித புதைகுழி விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் செயற்பாடுகளா அல்லது இராணுவத்தின் இனப்படுகொலையா என்பதை அரசாங்கம் சுயாதீன பரிசீலனைகள மூலம் உண்மையினை வெளிப்படுத்த வேண்டும்.

இதை விடுத்து அனைத்து விடயங்களுக்கும் சர்வதேச விசாரணைகளைக் கோருவதாயின் இலங்கைக்கே பாதிப்பாகும்.

இன்று இவ்வாறு அனைத்து சம்பவங்களுக்கும் சர்வதேச விசாரணைகளைக் கோரும் நிலைமைக்கு வர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமே காரணம்.

இலங்கையில் இதுவரையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு இவ் அரசாங்கத்தினால் எவ்வித சுயாதீன விசாரணைகளும் இடம்பெறவில்லை.

அதேபோல் ம்ன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி விடய்த்தில் உண்மை நிலைமையினை வெளிப்படுத்தினால் மட்டுமே தமிழ் மக்களின் உண்மை நிலை புரியும்.

இன்றும் யுத்தகால சூழ்நிலையிலேயே வடக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அன்று புலிகளினாலும், இன்று அரசாங்கத்தினாலும் வடக்கு மக்கள் கட்டுப்படுத்தப்பட்டு வாழ்கின்றனர் என்பதே உண்மை.

எனவே, மாத்தளை புதைகுழி சம்பவம் இன்று அனைவராலும் மறைக்கப்பட்டு மறைந்துள்ளதைப் போல் மன்னார் புதைகுழி சம்பவத்தையும்மூடிமறைத்துவிடக்கூடாது. இதன்உண்மை நிலைமையினையாவது அரசாங்கம் கண்டறிந்து சுயாதீனமாக செயற்பட வேண்டும்.

அத்தோடு இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களை தடுத்து ஜனநாயக ஆட்சிக்கான வழிமுறைகளை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)

இகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



எமது நண்பன்
திரு. கணேசலிங்கம்
விஜயராஜ் (BBA)
யாழ். பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாக மாணி (BBA) பட்டம் பெற்றதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதுடன் அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர மனதார வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்
அஜந்தன், கஜன்
(4369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FRENCH LANGUAGE CENTRE
FLC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.

# FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 750 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF Exam இல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி..... குறுகிய காலத்தில் DELF பரீட்சைக்கு தோற்றலாம் நேரத்தை வீணடிக்காது.. எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்.......

ஆரம்பம் 18.01.14 at 8am. No. 40, Palaly Road, ஆரியகுளம்.

ஆரம்பம் 20.01.14 at 3pm. No.181, 1st Floor, Main Street, Nelliady.

Deutsch & Sinhala வகுப்புகளும் நடை பெறுகிறது... 0779 789 456

(சி-6167)



## தை பிறந்தால் வழி பிறக்கும்!
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - வவுனியாவில்
## 18 பேருக்கு விசா வழங்கலுடன்



மீண்டும்

மாதம் 50,000/- வருமானத்துடனான வெளிநாட்டு ஹொட்டேல் பயிற்சி

**புதிய மாணவர் அனுமதி வழங்கல்**

உலகெங்கும் பல மில்லியன் தொழில்வாய்ப்புள்ள ஹொட்டேல் தொழிற்துறையில் 50,000/- வருமானம், சர்வதேச சான்றிதழ்களுடன் பயிற்சி பெற்று

Swiss, France, Qatar, Bahrain, New Zealand இல்

இலட்சக்கணக்கில் சம்பாதிக்கும் வாய்ப்பு

10 பேருக்கு விசேட கழிவு
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

ஜனவரி 17 வெள்ளி
யாழ்ப்பாணம்

ஜனவரி 18 சனி
கிளிநொச்சி, வவுனியா

வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து உடனடி அனுமதி பெற...

SMS / Call 07736 16 798 (Send: Name <Space>Address)


குறுகிய காலத்தில் அதிகளவான விசா வழங்கிய ஒரே நிறுவனம்

(சி-6176)

சிகரம் Sikaram www.sikaram.lk EduSikaram

மேலதிக விபரங்களுக்கு:
சிகரம் கல்வி தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Tel: 021 222 0011 Email: EduSikaram@gmail.com
www.Sikaram.lk
கல்விக்கும் தொழிலுக்கும் என்றே ஒரு இணையம்


## வேம்படியின் கண்ணீர்க் காணிக்கைகள்



மண்போற்ற
27.11.1956

விண்வாழ்த்த
09.01.2014

**அமரர் ஐயாத்துரை பாஸ்கரன்**

(உயிரியல் ஆசிரியர்,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை)

ஓராண்டு சேவைதனில் உன்னதமாய் செம்புலத்து
நீராக் எம்மவர்கள் உள்ளமதில் கலந்தீர்
கள்ளமில்லா கடமைமனம் கலகலக்கும் பேச்சுடனே
பள்ளியது வானில் பகலவனாய் வலம் வந்தீர்
பாஸ்கரனே உங்கள் பணிவாழ்வு முடிந்ததுவோ
மண்கணக்கை முடித்து மறு உலகு வாழவென
விண்ணுலகு சென்றீரோ வெந்ததையா எம்மிதயம்

பாடசாலைச் சமூகம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

(5295)


# தேவை

கட்டிட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா? மேசன்/தச்சு/ வெல்டர்/ பெயின்டர்/ இலற்றீசியன்(1200/=,1500/=) கையுதவியாளர் (800/=,1100/=) தங்குமிடம் உணவு வசதியுண்டு. (கொழும்பை அண்மித்த பிரதேச ங்கள், யாழ், கம்பஹா, கண்டி)(18-45 வயது) ஆட்கள் தேவை.

தொடர்பு:- 0775561883 (சி-6169)



# வீடு வாடகைக்கு

வெங்கடேசா வீதி
(பெருமாள் கோவிலடி)
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள புதிய வீடு
வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0779397536 (4908)



# PERSONAL CLASSES

A/L- 2014, 2015, 2016,
G.A.Q, B.A

Economics- N.தயாபரன்
Political Science-M.புவனதாஸ்

தொடர்பு: 0772965817 (4907)


## அமெ.தூதுவர் சிசனு...

தில் 2009-ம் ஆண்டு இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப் பட்டதாக கருத்திடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஸ்ரீபன்ஜேராப்எல்லைகளை கடந்து செயற்பட்டிருப்பதாகவும், அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக அமெரிக்காவின் தூதுவரை ஏற்றுக் கொள்ளப்படாத இராஜதந்திரி என்று அறிவிக்குமாறும் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஸ்ரீபன் ஜேராப்பை சந்தித்து பேசிய மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், இலங்கை பாதுகாப்பு தரப்பினருக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்திருப்பதாக, ஜாதிக்கஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது. (செ-11)


## நிரந்தர வேலைவாய்ப்பு

'தை பிறந்தால்வழிபிறக்கும்' உங்கள்வாழ்க்கை நிரந்தர தொழில் உடனடியாக அழையுங்கள். எம்மிடம் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் கோழி இறைச்சி /காமெண்ட்/water bottel தூரிகை/ சொக்லட்/ தேயிலை/ குளிர்பானம்/my cola பென்சில் போன்ற பல தயாரிப்புக்கு +உற்பத்தி உதவியாளர் +லேபல் +பொதியிடல் +தரம் பிரித்தல் பிரிவுக்கு 18-50 ஆண்-பெண் தேவை உணவு & தங்குமிட வசதிகள் குறைந்த விலைகளில். சம்பளம் 20000/=,32000/= நண்பர்/குழு/ தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளில் வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு. தொடர்பு:- 0775561883 (சி-6167)



## விற்பனையாகிறது
## தரம் 5 புலமைப்பரிசில்

மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக

கணித விவேக வழிகாட்டி
ஆக்கம் : I.L.M.ஸபான்

அடிப்படைத் தமிழ் வழிகாட்டி
ஆக்கம் : M.சுகந்தன்

சுற்றாடல் சங்கமம்
ஆக்கம் : S.சுதர்சன்

கட்டுரை சங்கமம்
ஆக்கம் : M.சுகந்தன்



வெற்றிக்கு வழிகாட்டி மாதிரி வினாத்தாள்
தரம் 1 முதல் 5 வரை

(C-6157) எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
தொ.பே : 011 4014438 / 077 6258778



# STUDY IN LATVIA
(schengen visa-EUROPE)
SPOT ADMISSION
1st Time in Jaffna

**22th of January at 10am-2pm**

## Why Study in Latvia?



* குறைவான கல்லூரிக்கட்டணம்.
* O/L தரத்தில் கட்டாயம் Maths and English சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* All Programs are in English Language.
* ஆங்கிலம் பேசத்தெரிந்தால் IELTS தேவையில்லை
* 20மணித்தியாலங்கள் வேலைசெய்யமுடியும்(per week)
* ஒரு நாள் வங்கி வைப்பு(SPONSOR) ஏற்றுக்கொள்ளப்படும்.
* Programmes available in all fields like "Engineering, Business,Medical,MBBS,hotel managment...etc

A/L- 3PASS கட்டாயமானது

WORLD EDUCATION CONSULTANCY
No:377,Sangaththanai,Chavakachcheri. (சி-6165)

முற்பதிவு அவசியம்...(நேரில் வரவும்)
தொடர்புகளிற்கு: 077 9265447,021 7200989



# A/L தமிழ் Seminar

A/L தமிழ் DAY, 2014
இலவச கருத்தரங்கு

+ கடந்த பரீட்சையின் மீட்டல்
+ இலக்கண விளக்கம்
+ வினா, விடைகள்

நாக.தமிழிந்திரன் (சி-6177)

BEACON யாழ்:-0772848223



2 மணித்தியாலத்தில்
# கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737

GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service 2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Computer Repair Laptop and motherboard Repair



# ALLIANCE FRANÇAISE DE JAFFNA
af Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



**யார் AF இல் FRENCH படிக்க முடியும்?**

திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்... இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற்றிட
- Videos for listening & speaking practice : "Bienvenue en France" Episode N°. 1,2,3,4...
- Teaching materials are given with free of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATEஐ பெறுங்கள்)
- Elementary level - 2 (4 Months, 80 Hours, அங்கிகரிக்கப்பட்ட பெறுமதியான CERTIFICATEஐ யாழ்ப்பாணத்தில் AF இல் மட்டுமே பெறமுடியும்) ஏற்கனவே கொஞ்சம் பிரெஞ் கற்றவர்களும் இங்கு படிக்கலாம்.
- International Diplomas : DELF A1, A2 - AF ,ல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. மேலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும்.
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள். மேலும் நூலக வசதி...

புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன.
உடன் பதிவுசெய்யுங்கள்
61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

Just say " Yes, I can... speak French "
AF is the only International Organization for French in Northern Province

(5250)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org